Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 17 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 17 (03.10.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 03

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்
* பல் கட்டுவதற்கும்,
* பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
* இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
(சி/2494)

# கருணா குழுவினரைத் தேடிப் புலிகள் எல்லைப் புறக் காடுகளில் வேட்டை!

## இருநாட்களில் மூவர் பலி; ஐவர் காயம்!

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவும் நேற்றுக் காலையும் விடுதலைப்புலிகளின் விசேட படையணிகள் நடத்திய இருவேறு தாக்குதல்களில் கருணா அணியைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.**

**இந்தச் சம்பவங்கள் குறித்து மேலும் தெரியவருவதாவது –**

மட்டக்களப்பு பொலநறுவ மாவட்டத்திற்கான எல்லைப் புறமான காடுகளில் கருணா குழுவைச் சேர்ந்தோரைத் தேடி அழிக்கும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளின் விசேட படையணி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

வாகனேரி பிரதேசத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஜெயந்தன் படையின் விசேட அணி மேற்கொண்ட விசேட அதிரடி நடவடிக்கை ஒன்றில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ரூபன் என்பவரின் சடலமும், ஆயுதங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும் இருவர் காயங்களுடன் அந்தப் பகுதியிலுள்ள இராணுவ முகாம் பக்கமாக தப்பிச் சென்றதாகவும் தெரிய வருகிறது.

குறிப்பிட்ட ஆயுதக்குழுவினரின் நடமாட்டம் குறித்துத் தகவலறிந்த விடுதலைப் புலிகள் வாகனேரி, குளத்துமடு பகுதியில் தேடுதல் நடத்தி இந்த அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை வாகனேரிக்கும் புனானைக்கும் இடையில் வாழைச்சேனை வர்த்தகரான பூபாலப்பிள்ளை சிவப்பிரகாசம் மீது இந்தக் குழுவினரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகக் கருதப்படுகிறது.

இதேவேளை வாகரை - மதுரங் குளத்தில் ஜெயந்தன் படையணி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் வெளியுறவு அதிகாரிகளுடன் புலிகளின் அரசியற் குழு சந்திப்பு!

(ஜெனீவா)

ஐரோப்பாவுக்கு பயணத்தை மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் குழுவினர் நேற்று முன்தினம் சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக பேச்சுக்களை நடத்தினர்.

சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சு சார்பில் றுடோல்பே மற்றும் எஸ்.கிம்கூவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் - சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக சுவிற்சர்லாந்து தனது பூரண ஆதரவை வழங்குமெனவும், மற்றும் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளுமெனவும் சுவிஸ் வெளிவிவகாரத் தூதுவர் றுடோல்பே தெரிவித்தார்.





## புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்க சொல்ஹெய்ம் ஜெனிவா பயணம்!

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று காலை ஜெனிவாவுக்குச் சென்று புலிகளுடன் பேச்சு நடத்தவிருப்பதாக

ஆராயும் நோக்கில் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியற் குழுவினர் ஜெனிவாவில் தங்கி கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

விருப்பதாக கூறப்படுகிறது. விடுதலைப்புலிகளுடன் எரிக்சொல்ஹெய்ம் பேச்சு நடத்திய பின்னர் புலிகளின் அரசியல் குழுவினர் எதிர்வரும் 07 ஆம் திகதி ஒஸ்லோ

ஒன்றில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் கருணா குழுவைச் | நடமாட்டம் குறித்துத் தகவலறிந்த விடுதலைப் புலிகள் வாகனேரி, | குளத்தில் ஜெயந்தன் படையணி

(12 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்க சொல்ஹெய்ம் ஜெனிவா பயணம்!

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று காலை ஜெனிவாவுக்குச் சென்று புலிகளுடன் பேச்சு நடத்தவிருப்பதாக தெரியவருகின்றது.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பது தொடர்பாக பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயும் நோக்கில் விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியற் குழுவினர் ஜெனிவாவில் தங்கி கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

புலிகளின் குழுவினரைச் சந்தித்து பேச்சு நடத்தும் நோக்கிலேயே எரிக் சொல்ஹெய்ம் இன்று காலை ஜெனிவாவுக்குச் செல்ல விருப்பதாக கூறப்படுகிறது. விடுதலைப்புலிகளுடன் எரிக்சொல்ஹெய்ம் பேச்சு நடத்திய பின்னர் புலிகளின் அரசியல் குழுவினர் எதிர்வரும் 07 ஆம் திகதி ஒஸ்லோவுக்குச் சென்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனைச் சந்திக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.





**மட்டக்களப்பில் நடக்கவிருந்த**

## படையினர் - புலிகள் சந்திப்பு காலவரையின்றி ஒத்திவைப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் எதிர்வரும் புதன்கிழமை விடுதலைப் புலிகளுக்கும், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் நடைபெறவிருந்த சந்திப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி வவுணதீவு யுத்த சூன்ய பிரதேசத்தில் இருதரப்பினருக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய மாதத்தில் இரு தடவை இத்தகைய சந்திப்பை மேற்கொள்வது எனத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோசப் எம்.பி. தலைமையிலான மனித உரிமை குழு ஜெனிவாவுக்கு!

(கொழும்பு)

தற்போது ஜெனீவாவில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் இணைந்து கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் எட்டுப்பேர் கொண்ட குழுவொன்று நேற்று கொழும்பிலிருந்து ஜெனிவாவிற்கு புறப்பட்டுச் சென்றது.

இந்தக்குழுவில் விடுதலைப் புலிகளின் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் இணைப்பாளர் வண.பிதா பீ.கருணாரத்னம் மற்றும் உறுப்பினர்களான சட்டத்தரணி கா.சிவபாலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விரைவாகப் பேச்சுவார்த்தைக்குத் திரும்புங்கள்; இரண்டு தரப்பிடமும் அமெரிக்கா வலியுறுத்தல்!

(நியூயோர்க்)

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மிக விரைவில் ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் அமெரிக்கா கோரியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் றிச்சட் பௌச்சர் கடந்த வெள்ளிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது -

விடுதலைப்புலிகள் அரசாங்கத்திற்கு எதிராகவும், தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராகவும் நடத்தும் தாக்குதல்களை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரவேண்டும் அத்துடன் தமது படைகளில் சிறுவர்களை சேர்ப்பதனையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

சமாதானப்பேச்சுவார்த்தை மீள ஆரம்பிப்பதற்கான காலம் மேலும் காலதாமதமாகுமானால் இரு பகுதியினருக்கும் இடையில் இது தொடர்பில் ஆர்வம் குறைந்து விடும். அத்துடன் சகல இலங்கையர்களும் உண்மையான சமாதானத்தை அடைய மாட்டார்கள்.

எனவே - இலங்கையில் அமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு நாட்களாக மன்னாரில் நீடித்த பதற்றம் தணிந்தது!

(மன்னார்)

இரண்டு நாட்கள் நீடித்த பதற்றத்தை அடுத்து, மன்னார் நகர் மற்றும் பேசாலை பிரதேசத்தில் நேற்று அமைதி நிலவியதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்றுக் காலை 6 மணியுடன் அங்கு பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டது.

இதனையடுத்து மக்கள் தமது கடமைகளில் ஈடுபட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. வழமையாக நேற்று மன்னாரில் கடையடைப்பு அமுல்படுத்தப்பட்டதால் நகரில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது.

எனினும் மக்கள் மத்தியில் நேற்று முன்தினம் காணப்பட்ட பதற்றம் நேற்று இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலையும் மக்கள்

(12- ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஏயர்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# சங்கானை சிவப்பிரகாசத்துக்கு புதிய அதிபர் நியமனம்

(சங்கானை)

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் புதிய அதிபராக திருமதி வேணுகா சண்முகரத்தினம் கடந்த வியாழன் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

இந்தப் பாடசாலையில் முன்னர் அதிபராகக் கடமையாற்றி, தெல்லிப்பளைக் கல்விக்கோட்டப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்ற ச.கைலாசநாதனின் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கடமையாற்றிய இவர் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் முதல் பெண் அதிபராக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# ஒளி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நெல்லியடியில் பேரணி!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பிரதேசத்தில் சர்வ தேச நல்லொழுக்க தினமாகிய இன்று - நெல்லியடி போரூட் ஒளி நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிற்பகல் 2.30 மணிக்கு பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்த ஊர்வலம் நெல்லியடி போரூட் கிளையிலிருந்து நெல்லியடி சந்தியூடாக மத்திய மகாவித்தியாலயம் வரை செல்லவுள்ளது. அதன் பின்னர் வல்வை விளையாட்டுக் கழகத்துக்கும் சிவானந்தா விளையாட்டுக்கழகத்திற்குமிடையிலான காட்சி உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளதாக ஒளி நிறுவன ஏற்பாட்டாளர் இ.ரெனிஸ்லாஸ் தெரிவித்தார். (12)





சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்றைய தினம் இடம்பெற்ற கண்ணீர் பயணங்கள் நூல் வெளியீட்டு விழாவில் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நூலின் சிறப்புப் பிரதியினை வெளியீட்டு வைப்பதனை முதற் படத்திலும்,

வெளியீட்டுரையினை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிகழ்துவதனை கீழுள்ள படத்திலும் காணலாம். (29)

# தென்மராட்சி பகுதிகளில் பனைமரம் தறிக்கத் தடை!

## பிரதேச செயலர் அறிவிப்பு

தென்மராட்சி பிரதேசத்தில் பனைமரங்களைத் தறிப்பதற்கு தென்மராட்சி பிரதேச செயலகம் தடை விதித்துள்ளது.

மேற்படி பிரதேசங்களில் கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்த அனர்த்தங்களினால் பெருமளவான பனை மரங்கள் சேதமுற்றும், அழிந்தும் உள்ளன.

தற்போது சேதமடைந்த கட்டடங்கள், வீடுகள் புனரமைக்கப்படுவதற்குப் பெருமளவான பனை மரங்கள் அழிக்கப்படுகின்றன.

இதனால், தென்மராட்சி பிரதேசத்தின் பனைவளம் குன்றிவருவதை அடுத்து பனைமரங்களைத் தறிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே - புதிய வீடுகளை கட்டும்போது அத்திவாரத்தில் நிற்கும் மரம், யுத்தத்தினால் சேதமுற்ற மரம், பிறருடைய வீடுகளுக்கு சேதம் ஏற்படுத்தக்கூடிய வகையில் நிற்கும் மரம் ஆகியவற்றை பிரதேச செயலரின் அனுமதி பெற்று தறிக்க முடியும் என பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்தப் பிரதேசத்தில் பனைமரம் தறிப்பதற்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

# முதியோர் தினவிழா

(உடுவில்)

வலி.தெற்கு பிரதேச சிறுவர், முதியோர் தினவிழா நாளை பிற்பகல் 2 மணிக்கு உடுவில் பிரதேச செயலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.திருவாகரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு, யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பிரதமவிருந்தினராகவும், வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

முதியோர் கௌரவிப்பு, மாணவர்களின் நாடகம், கிராமிய நடனம், கட்டுரை, கவிதைப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

# யாழ்.பல்கலைக் கழகத்தில் வங்கமொழித் திரைப்படம்!

யாழ்.பல்கலை திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் புத்தாடெப்தாஸ் குப்தவாவின் நெறியாள்கையில் உருவான லல்தறஜா (சிவப்புக்கதவு) எனும் வங்கமொழித் திரைப்படம் ஆங்கிலத்துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது. அத்துடன் இணைவாக தெவிவந்தனா என்ற நாட்டிய நிகழ்வுப்படமும் காண்பிக்கப்படும். இந்த நாட்டிய நிகழ்வு ஒடிசி, கதக், பரதம், மணிப்புரி ஆகிய நடனமுறைகளை இணைத்து ஆக்கப்பட்டதாகும். படத்தின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகைதந்து பயன்பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# உலக வங்கியின் நிதியுதவியுடன் அமைத்த வீடுகள் திறப்பு விழா!

யாழ்.மாவட்டத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகள் நாளை திங்கட்கிழமை உலகவங்கி அதிகாரிகளால் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த மாவட்டத்தில் முன்மாதிரித்திட்டமாக போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 100 வீடுகளை அமைப்பதற்கு உலக வங்கி முன்வந்து, தலா ஒருலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை பயனாளிகளுக்கு கட்டம் கட்டமாக வழங்கியது.

இதன் அடிப்படையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்-அரியாலையில் 25 வீடுகளும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 25 வீடுகளும், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 25 வீடுகளும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 100 வீடுகளும் அமைக்கப்பட்டன.

இந்த வீடமைக்கும் திட்டத்தை கருத்திற்கொண்டு மேலும் பல வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது.

மேற்படி வீடுகளின் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்காக உலகவங்கியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர்களும் செயலக உயர் அதிகாரிகளும் இப்பகுதிகளுக்குச் கடந்த செவ்வாய்க்கிழமை சென்று பார்வையிட்டனர்.

மேற்படி கிராம அலுவலர்பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கே கிராம அலுவலர் சிபாரிசின்பேரில் இந்த வீடுகள் வழங்கப்பட்டன.. (122)

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

நட்புறவு உதவியாளர் பயிற்சி நெறியில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை பி.ப. 2.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (29)

## கருத்தரங்கு

யாழ்.கல்வி வலயத்தின் முறைசாராக்கல்விப் பிரிவில் போதனாசிரியர், உள்ளகப் பயிற்சியாளர்களுக்கான கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் காலை 9.30 மணிக்கு நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## திருப்பணிச்சபையின் வருடாந்த கூட்டம்

புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய திருப்பணிச்சபை வருடாந்த பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 9 மணிக்கு ஆலயமுன்றலில் சபைத்தலைவர் சோ.ஜெயபாலசுந்தரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அங்கத்தவர்களையும், திருவிழா உபயங்கள் செய்வோரையும் குறிப்பிட்ட நேரத்தில் வருகைதருமாறு ஆலயதிருப்பணிச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

## மகளிர் அவையின் ஆண்டுவிழா

இளவாலை திருமறைக் கலாமன்ற மகளிர் அவையினரின் ஆண்டு விழா நிகழ்வு இன்று புனித ஹென்றியர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

செல்வி ஜஸ்மின் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில், பிரதம விருந்தினராக இளவாலை றோமன் கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலை அதிபர் அ.மரியாம்பிள்ளையும், சிறப்புவிருந்தினராக பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியர் வை.யோகராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (41)


## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

கனடா குடியுரிமை பெற்ற, சொந்தத் தொழில் புரியும் 39 வயது இந்து சமய, சைவபோசன மணமகனுக்கு மணமகள் தேவை. சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் - 33, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (949)

### காணி விற்பனைக்கு

மல்லாகம் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையில் 21/2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு-0777242198.

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த



அரசாட்சி

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)

(சி-2725)

திறஞ்சனாலய் சங்கானை

தனுஷ், சிந்துலானி, கருணாஸ் மற்றும் மணிவண்ணன் நடித்த

திருடா திருடி

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

MEET THE PARENTS

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

(சி-2723)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பதுவளை பொலிகண்டியைச் சேர்ந்தவரும், தவராசா (சிவலிங்கம்) சந்திராதேவியின் புதல்வனும், நெல்லியடி மெதடிஸ்தமிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவனுமான

### தவராசா சிலம்பரசன்

அவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் 133 புள்ளிகள் பெற்று சித்தியடைந்ததையிட்டு மனமார வாழ்த்துவதுடன், சகல கலா வல்லியின் அருள் பெற்று அவர் மேலும் மேலும் கல்வியில் சிறப்படைய எமது நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பதுவளை, பொலிகண்டி.

மாமா கோவிந்தராசா (பவுண்),
அத்தை - உதயமலர்,
மைத்துனர்மார் - உதயராஜ், உதயசங்கர்,
மைத்துனிமார் - மீரா, ரேகா, மதுஜா.

(953)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிவிட்டி அல்வாய் மேற்கைச் சேர்ந்தவரும் மதிகரன் தேவிகா ஆகியோரின் புதல்வனும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவனுமான

### மதிகரன் நிகாஸன்

அவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகள் பெற்று சித்தியடைந்ததையிட்டு மனமார வாழ்த்துவதுடன், சகலா வல்லியின் அருள்பெற்று அவர் கல்வியில் மென் மேலும் உயர்வடைய எமது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிளிவிட்டி, அல்வாய் மேற்கு.

அப்பப்பா, அப்பம்மா, மனோகரன் சித்தப்பா, சித்தி, மங்கேஸ்கரன் சித்தப்பா, சித்தி, முகுந்தன் சித்தப்பா, பரனீதரன் சித்தப்பா, சித்தி.

(952)

யாழ்ப்பாணம்

# அடுத்த தலைமுறையின் விடிவுக்காகத்தான் நாம் போராடவேண்டிய நிலைக்கு வந்தோம்!

## சிறுவர்தின நிகழ்வில் எழிலன்



'சிறுவர்களைப் பற்றியும், அவர்களது பாதுகாப்பு, உரிமைகள் பற்றியும் எல்லோரும் பேசமுடியும். ஆனால், சிறுவர்களின் எதிர்காலம், பாதுகாப்பு குறித்து அதிகம் சிந்தித்துச் செயற்படுபவர்கள் விடுதலைப் புலிகளாகிய நாங்கள் மட்டுமே' என்று நேற்று முன தினம் திருகோணமலை - மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற 'சர்வதேச சிறுவர்' தின விழாவில் உரையாற்றிய திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியறதுறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், மூதூர் வலயக் கல்விப் பணிமனை என்பன இணைந்து ஏற்பாடு செய்த இந்த சர்வதேச சிறுவர்தின நிகழ்வு நேற்று முன் தினம் மூதூரில் நடந்தது.

இந்த நிகழ்வில், சிறப்புரையாற்றிய சி.எழிலன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தற்போது வன்னிப்பெருநிலப் பரப்பின் எந்தவொரு பிரதேசத்திலும் சிறுவர்கள் பிச்சை எடுப்பதைக் காண முடியாது. காரணம் - பிச்சை எடுக்கும் சிறுவர்கள் உடனடியாக அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களது தேவைகள் குறித்து ஆராய்ந்து, அதற்குரிய உதவிகள் அனைத்தும் உடனடியாக வழங்கப்படுகிறது.

அதுமட்டுமன்றி, எந்தவொரு சிறு பிள்ளையும் அநாதையாக வீதியில் நடமாடுவது இல்லை. அத்தகைய சிறுவர்களை உரிய அமைப்புகளுக்கு கொண்டு சென்று, கல்வி மற்றும் அனைத்து வசதிகளும் வழங்கப்படுவதற்குரிய செயற்திட்டங்களை எமது தேசியத் தலைவர் திறம்பட வகுத்து செயற்படுத்தி வருகின்றார்."

"சிறுவர்களினதும், எமது அடுத்த தலை முறையினதும் வாழ்வுக்காகதான் நாம் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம்.

எங்களுக்காக மட்டுமே நாங்கள் போராடுவதாக இருந்திருந்தால் இதுவரை 17 ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளை இழந்திருக்க தேவையும் இல்லை. இன்றும் தொடர்ந்து பல்லாயிரம் போராளிகள் போராட்டத்தில் ஈடுபட்டு கொண்டிருக்க வேண்டியதும் இல்லை.

"சிறுவர்களை போராட்டத்தில் நாங்கள் ஈடுபடுத்துகின்றோம் என்றும், இது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத பயங்கரவாத நடவடிக்கை என்றும் - உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் எம் மீது பெரும் குற்றச் சாட்டு தொடர்ந்து சுமத்தப்பட்டே வருகின்றது.

ஆனால், சர்வதேசத்திடம் நாங்கள் கேள்வி கேட்க விரும்புகின்றோம் - சிறுவர்களைப் படையில் இணைப்பது தவறு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார்.

இந்த சிறுவர்கள் என்ன காரணத்தின் அடிப்படையில் எம்முடன் வந்து இணைகின்றனர் என்பதை அவதானிக்க வேண்டும்.

"கடந்த காலங்களில் பிறந்து 6 நாள் முதல் 6 வயது வரையான 30 ஆயிரம் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த 2 ஆயிரம் சிறுவர்களும் கொல்லப்பட்ட போது அதனை யாரும் ஏன் எண்ணிப்பார்க்கவில்லை?

கொல்லப்பட்ட சிறுவர்கள் யாரால் கொல்லப்பட்டனர் என்று எவரும் கேட்கவில்லை. இவர்களின் கொலைகளுக்கு காரணமானவர்கள் யாரும் பயங்கரவாதிகள் என்று கூறவில்லை.

அவர்களுக்கு எந்தத் தண்டனையும் வழங்க யாரும் முன்வரவிலலை. இத்தகைய கொடூரங்களைச் செய்தவர்கள் யார் என்று எல்லோருக்கும் தெரியும். பள்ளிச் சீருடையில், பாடசாலைகளில் வைத்தே விமானக் குண்டு வீச்சில் சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.

ஆனால், குண்டு வீசிய விமானத்தை அதன் கொடூரத்தைப் பார்த்து மனம் வெம்பின. அந்த விமானத்தைச் சுட்டு வீழத்தவேண்டும் எனப் புறப்பட்டவன் பயங்கரவாதியாகப் பேசப்பட்டான்.

இது உலகின் பாரபட்சமான அணுகுமுறையே அன்றி, வேறொன்றையும் காட்டி நிற்கவில்லை. இது எத்தகைய நியாயத்திற்கு உட்பட்டது என்பது எமக்கு விளங்கவில்லை.

"போராட்டம் ஏன் ஏற்பட்டது என்று பார்த்தால் - இலட்சக்கணக்கான சிறுவர்களின் வாழ்வுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

சிறுவர்களின் பால் உணவுகள், அத்தியாவசிய சிறுவர் மருத்துவப் பொருட்கள், உடைகள், கற்றலுக்குப் பயன்படும் கரும்பலகைக்கான கறுப்புமை என்பவற்றுக்குக்கூடத் தடைவிதிக்கப்பட்டு இருந்தது.

இவ்வாறு சிறுவர்களுக்கு எதிரான தடைகளை விதித்தமை, யாருக்கும் பயங்கரவாதமாக தெரியவில்லை.

இந்தத் தடைகளால் பட்டினி, பஞ்சம் ஏற்பட்டு சிறு குழந்தைகள் சிறுகச் சிறுகக் கொல்லப்பட்டபோது இத் தனை பல மனிதாபிமானமற்ற நிலையை நீக்குமாறும், பொருளாதாரத் தடையை நீக்குமாறும், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறும் சிறுவர் உரிமைகள் பற்றி இப்போது பேசும் சர்வதேசம் ஏதும் பேசவில்லை."

"இப்போது சமாதான சூழல் ஏற்பட்டபின்னர் இங்குவந்து நாங்கள் சிறுவர்களை படையில் சேர்க்கின்றோம் என்றுகூறி, அது பிழை என்று பெரிதாகக் கூக்குரல் இடுகின்றன சர்வதேச அமைப்புக்கள் -

"இன்றைய நிலையிலும் சர்வதேசத்திடம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகின்றோம்.

இன்று நிலைமைகள் மாறிக் கொண்டு செல்கின்றது. இன்று இனவாதம் பேசும் அனைவரும் சமாதானத்தை விட்டுவிட்டு, போரைக் கொண்டு வருமாறும் கூறி வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

சர்வதேச நிறுவனங்களும் எமக்கு ஒரு உறுதிமொழியை வழங்குமா? அதாவது, போர் ஒன்று தொடங்கினால் 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் கைதுசெய்யப்படவோ, தாக்கப்படவோ, கொல்லப்படவோ மாட்டார்கள்.

அவர்கள் பூரணமாகப் பாதுகாக்கப்படுவர் என்ற உறுதியை இவர்களால் எமக்கு வழங்கமுடியுமா? இத்தகைய நிலைமைகள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்தக்கூடிய மாற்றுவழிகள் எதுவும் அவர்களிடம் இல்லை.

எனவே, சர்வதேச சிறுவர் தினத்தில் சர்வதேச அமைப்புக்களுக்கும், சர்வதேசத்துக்கும் நாம் விடுக்கும் செய்தி யாதெனில், போரினால் சிறுவர்கள் அல்லற்படாத நிலையை ஏற்படுத்த சர்வதேசம் மாற்றுவழிகளை முன்வைக்கவேண்டும் என்றும் எழிலன் தனது உரையில் குறிப்பிட்டார்.

(10,04)

## புலமைப்பரிசில் உதவித்தொகை அதிகரிப்பு

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவை, 500 ரூபாவால் அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்கென 1240 லட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது மாதாந்தம் 250 ரூபா உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

அடுத்த ஆண்டிலிருந்து இந்தத் தொகையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்து சபைக்கு 2000 புதிய பேருந்துகள்

இல்ங்கை போக்குவரத்துச் சபைகுமேலும் 2000 புதிய பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த வருட இறுதிக்குள் இந்தப் பேருந்துக்கள் கொள்வனவு செய்யப்படும் என்றும் இதன்மூலம் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகள் முன்னேற்றமடையும் என்றும் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரோ தெரிவித்தார்.

இதேவேளை மத்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருநதுகளை திருத்துவதற்கு 150 மில்லியன் ரூபா ஜனாதிபதி ஒதுக்கியிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவிததார்.

# ஹெல உறுமயவின் நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் ஏற்றாலேயே பேச்சு!

## ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

தமது கட்சி முன்வைக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாக தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதி வழங்கினால் மட்டுமே - அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும் என, ஜாதிக ஹெல உறுமய நிபந்தனை விதித்துள்ளது.

இலங்கையின் இறைமையையும், சட்ட முறையையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளல், ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு ஜனநாயக வழிமுறைக்கு வருவதற்கான உறுதிமொழி வழங்கல் போன்ற நிபந்தனைகளைப் புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய - ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைவாக நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு, உடனடியாக சிறுவர் போராளிகளையும், தற்கொலைக் குண்டுதாரிகளையும் விடுதலைப் புலிகள் விலக்கவேண்டும்.

மேலும் வடக்கு - கிழக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நிராயுதபாணிகளாக்கப்பட்டுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கும், மாற்றுக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகளை - விடுதலைப் புலிகள் உடனடியாகக் கைவிடவேண்டும்.

அத்துடன் தேசிய, சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமை பிரகடனத்துக்கு இணங்குவதாக விடுதலைப் புலிகள் உத்தரவாதம் வழங்கவேண்டும்.

இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே, விடுதலைப் புலிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தமுடியும் என ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகம் தெற்காசியாவில் அதிகரிப்பு!

தெற்காசியாவில் பெண்களும், சிறுவர்களும் விற்பனை செய்யப்படுதல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உந்தப்படுதல் போன்ற நடவடிககைகள் வருடா வருடம் அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் அமையத்தின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய யுனிசெவ்வின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் சடீக் ரசீட் இந்தத் தகவலை வெளியிட்டார்.

தெற்காசிய நாடுகளின் அரசாங்கங்கள் 2001 ஆம் ஆண்டில் உலகளாவிய சிறுவர் கடத்தலுக்கு எதிரான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள போதும், இந்தச் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான காரணம் குறித்து உரிய அடிப்படைகளை இன்னும் அடையாளம் காணவில்லை.

ஆசியாவில் மாத்திரம் வருடம் ஒனறுக்கு சுமார் ஐயாயிரம் பெண்களும், சிறுவர்களும் - விற்பனை அல்லது பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

அதேநேரம் உலகளாவிய ரீதியில 1.2 மில்லியன் பெண்களும், சிறுவர்களும் இவ்வாறான கட்டாய பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அப்துல் காதரின் விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் அமைச்சர் அப்துல் காதரின் விளக்கமறியல் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழுமபு பிரதான நீதிவான் இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

சமுர்த்தி நிதியை தவறான வழியில் பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தியே முன்னாள் அமைச்சர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை பிணையில் செல்ல அனுமதிகருமாறு சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்ட போதும், நீதிவான் அதற்கு உடன்படவில்லை.

## ஜனாதிபதியின் உரையில் எந்த மாற்றமும் இல்லையாம்

ஐக்கிய நாடுகள் சபையில் ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரைக்கும், ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட அறிக்கைகளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பாக பல்வேறு தரப்புக்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருவதாக, ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி - ஐக்கிய நாடுகள் சபையில் ஆற்றிய உரையில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை என்றும்,, அதில் சில பகுதிகள் சுருக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன், வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் யாழ். மாவட்டத்தால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதின கலா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறுவர்தின நிகழ்வுகளிலிருந்து சில காட்சிகள்...

# 'நமது ஈழநாடு' 2 ஆம் ஆண்டு நிறைவுவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்








அகவணக்கத்தின் போது...




சபையில்...



அரங்கில்...



பரிசு பெற்றோர்...






பரிசு பெறுவோர்







பேராசிரியர் அ. சண்முகதாஸ்



ம.க. ஈழவேந்தன்



செங்கை ஆழியான்



துணைவேந்தர் சு. மோகனதாஸ்



சி. இளம்பரிதி



மாவை சேனாதிராஜா



பொன். பூலோகசிங்கம்



பொன். கணேசமூர்த்தி

யாழ்ப்பாணம்

# தமிழரின் பொறுமையால் தான் சிங்கள தேசம் அமைதியாகவுள்ளது

## திலீபன் நினைவுதின நிகழ்வில் சூ.சிறில்

(யாழ்ப்பாணம்)

எமது தேசியத் தலைமை சிங்கள தேசத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு, இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும், இதிலுள்ள பல கருத்துக்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தால் - அதன் விளைவான யுத்த நிறுத்தத்தால் அதிக நன்மைகளைப் பெற்றவர்கள் சிங்கள மக்களே. கடந்த மூன்று வருடங்களாக எமது தேசத்தின் பொறுமை, சிங்கள தேசத்தின் அமைதிக்கு காரணமாகவுள்ளது. பொறு மைக்கும் ஓர் எல்லையுண்டு. இன்று நாம் ஒரு வரலாற்றுத் திருப்பு முனையில் நிற்கிறோம் என, யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்போரவைத் தலைவர் சூ.சிறில் தெரிவித்தார்.

தியாகி திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் அண்மையில் கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில், கைதடி தேசிய எழுச்சிப் பேரவை உப செயலாளர் ச.தங்கராசா தலைமையில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எமது இனத்தின் விடுதலைக்கான போராட்டத்தை பயங்கரவாதம் என்று சிங்கள தேசம் முன்வைத்த மாயக் கோசத்தை சர்வதேசம் இனறு புரிந்து கொள்ளத் தலைப்பட்டுவிட்டது. உண்மையில் நீடித்த நிரந்தரமான சமாதானத்தை சிங்களதேசம் எமக்குத் தரப்போவதில்லை.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உண்மையான பௌத்தனாக இருந்திருந்தால், நாம் ஆயுதம் ஏந்தியிருக்கத் தேவையில்லையென எமது தேசியத் தலைவர் முன்பு ஒரு தடவை கூறியிருந்தார்.

சந்திரிகாவும் இன்று இதே நிலையல் தான் இருக்கிறார். இவர்களால் தான், நாம் எமது விடுதலையைப் போராடிப்பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தமிழர் எமது போராட்டம் இராஜதந்திர நகர்வுகளிலேயே இன்று பெரிதும் தங்கியுள்ளது.

தமிழ் மக்களை இராணுவ ரீதியிலோ அல்லது அரசியல் ரீதியிலோ வெல்ல முடியாது என்று சந்திரிகா அம்மையார், ரணில் இருவருக்குமே நன்கு தெரியும்.

தமது பொருளாதார வீழ்ச்சியைத் தடுப்பதற்காக சர்வதேசத்தின் மத்தியில் சமாதானம் பற்றிக் கூறி வருகின்றார்கள். சர்வதேசம் இன்று மிகவும் திடமாகவுள்ளது. சமாதானத்துக்குப் பிறகே நிதியுதவி என்பதில் அவர்கள் உறுதியாகவுள்ளனர். இருந்தும் சந்திரிகாவின் அரச இயந்திரம் போருக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு வருவது போல் தெரிகின்றது. இதனை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்தார்.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### ஏழாவது அகவையில்



பெயர் : சி.பிரணவி,
முகவரி : கச்சாய் வீதி, சாவகச்சேரி.

### நான்காவது அகவையில்



பெயர் : கு.அபிஷானி,
முகவரி : சேதுபதி, துன்னாலை மத்தி.

### ஐந்தாவது அகவையில்



பெயர் : ஜி.ஆரபி
முகவரி : உடுவில் தெற்கு. சுன்னாகம்.

### ஆறாவது அகவையில்



பெயர் : ச.கலையரசி,
முகவரி : நல்லூர், யாழ்ப்பாணம்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------------
பெற்றோர் ஒப்பம்


# இலக்கிய சாகித்திய ரத்னா விருது இம்முறை பேராசிரியர் சிவத்தம்பிக்கு

(கொழும்பு)

இலங்கைக் கலாசார திணைக்களம், இலங்கைக் கலைக்கழகத்தின் தேசிய இலக்கியச் சபையினால் கடந்த இரு வருடங்களாக வழங்கப்பட்டு வரும் இலக்கிய சாகித்திய ரத்னா விருது இத்தடவை பேராசிரியர் கா.சிவத்தம்பிக்கு வழங்க ஏற்பாடாகியுள்ளது.

தமிழ் இலக்கியத்துறைக்கு அவர் ஆற்றிய பணிக்கு இவ்விருது அவருக்கு வழங்கப்படுகின்றது. இது வரை எழுத்தாளர்களான வரதர், சொக்கன் ஆகியோர் 2002, 2003 ஆம் ஆண்டுகளில் இந்தவிருதைப் பெற்றுக்கொண்டனர்.

50 ஆயிரம் ரூபா பணப்பரிசும், சான்றிதழ் மற்றும் விருது என்பன இந்தவிருதுக்கான பரிசில்களாக வழங்கப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்முறை தேசிய இலக்கிய விருதுகளுக்கென 14 சிங்கள ஆக்கங்களும், 9 தமிழ் ஆக்கங்களும், 10 ஆங்கில ஆக்கங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இவ்விருதுக்கென 525 சிங்கள ஆக்கங்களும், 68 தமிழ் ஆக்கங்களும், 50 ஆங்கில ஆக்கங்களும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இவற்றுள் இருந்தே பரிசுக்குரிய ஆக்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

சாகித்திய விருது, இலக்கிய விருதுகள் வழங்கும் சிறப்பு நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் இடம்பெறவிருக்கிறது.

செங்கை ஆழியானின் நாவலுக்கும், எஸ்.முருகானந்தனின் 'தரை மீன்கள்' என்ற சிறுகதைத் தொகுதிக்கும், சிறுவர் இலக்கியத்துக்கென ஏ.கே.குணநாதனின் ஆக்கமும், மொழிபெயர்ப்பு இலக்கியத்துக்கென என்சிலங்கம் மொழி பெயர்த்த வேலுப்பிள்ளையின் 'தேயிலை' என்ற ஆக்கத்துக்கும், கவிதைத் துறையில் முனாய் முஸ்தபா என்பவரின் தொகுதிக்கும் இம்முறை இலக்கிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

# துரித அபிவிருத்திக்காக பத்துக் கிராமங்கள் தெரிவு

வலிகாமம் தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட - பின் தங்கிய 10 கிராமங்களை துரித அபிவிருத்தி செய்வதற்காக - கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (ரிடோ) கிராம நலச் செயற்திட்டத்துக்கு தெரிவு செய்துள்ளது.

முதற் கட்டமாக கிராம நலச் செயற்திட்டத்துக்கு உட்பட்டதாக காக்கைதீவு, சிறுவிளான், மாதகல் கிழக்கு, கூழாவடி, உயரப்புலம், இளவாலை, ஆனைக்கோட்டை, முள்ளி, பிரான்பற்று, மாதகல் சகாய புரம், மகாஜன சனசமூக நிலையப் பகுதி, முள்ளானை ஆகிய கிராமங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சிறுவர் கல்விப் போசாக்கு, கல்வி அபிவிருத்தி, இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சிகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்தக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

கிராமத் தலைவர்கள் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களின் விபரங்களையும், தொழிற்பயிற்சி தொடர்பான விபரங்களையும் வேறு அவசியமான விபரங்களையும் திரட்டி, குளப்பிட்டி வீதி ஆனைக் கோட்டையிலுள்ள (ரிடோ) நிறுவனத் திடம் சமர்ப்பிக்குமாறு மானிப்பாய் பிரதேசசபைச் செயலாளர் எஸ்விக்டர் தெரித்தார். (91)

# இலக்கிய விழா தொடர்பான கலந்துரையாடல்

மாகாண கல்வித்திணைக்களத்தால் எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ள தமிழ் இலக்கிய விழா தொடர்பான இறுதித் தீமானங்களை விளக்கும் - கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் எஸ்.சிறிதேவி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தமிழ் இலக்கிய விழாக்குழு உறுப்பினர்கள், குழுக்களின் தலைவர்கள், பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், வரவேற்கும் பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் இலக்கிய விழாக் காலத்தில் எடுக்க வேண்டிய முன்னேற்பாடுகள் மற்றும் விருந்தினர்களை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் என்பன பற்றி கலந்துரையாடப்படவுள்ளது.

## மட்டுவில் வடக்குக்கான

# மின்விநியோகப் பணிகள் மந்தகதியிலேயே நடைபெறுகிறது

மட்டுவில் வடக்குப் பகுதிக்கான மின்னிணைப்பு வேலைகள் மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றன.

தென்மராட்சிப் பகுதிக்கான மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில், மட்டுவில் வடக்கு, சரசாலை, கல்வயல் பகுதிகளுக்கான மின்னிணைப்பு வேலைகள் கடந்த ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

இருந்தும் இன்றுவரை மின்கம்பங்கள் நடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

சில இடங்களில் மின்கம்பங்களுக்கு குழிகள் தோண்டப்பட்டுள்ளன. ஆங்காங்கே சந்திக்குச்சந்தி மின்கம்பங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

வேறு எவ்வித முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை. இந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தோண்டப்பட்ட குழிகளையும், நடப்பட்ட மற்றும் அடுக்கிவைக்கப்பட்டுள்ள மின்கம்பங்களையும் பார்த்தபடி, எமக்கு இன்று வரும் நாளை வரும் என ஏக்கத்துடன் காத்திருககின்றனர்.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு தென்னம் நாற்றுக்கள்

(யாழ்ப்பாணம்)

உலக உணவு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அதிகார சபையால், சமுர்த்தி பயனாளிகளுக்கு தென்னம் நாற்றுகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 16 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்படும் உலக உணவு தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் 14 ஆம் திகதி இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் உதவியுடன் சுமார் ஒரு லட்சம் தென்னம் நாற்றுகளை சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்க, தென்னை பயிர் செய்கைச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதனால், நாடு முழுவதிலும் உள்ள 25 ஆயிரம் வரையிலான சமுர்த்தி குடும்பங்கள் நன்மையடையக் கூடும்

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்துக்கு என சுமார் ஆயிரம் தென்னம் நாற்றுக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு தென்னை நாற்றுக்கு 10 ரூபா அறவிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (44)

# வலி.தென்மேற்கு பிரதேசசபையிலிருந்து ஆறு ஊழியர்கள் இடமாற்றம்

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் கடமையாற்றி வரும் ஆறு பேர் - இந்த வருட இறுதியுடன் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இவர்களது இடமாற்றம் தொடர்பான கடிதங்களை வடக்கு - கிழகசு மாகாண உளளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி பிரதேசசபை செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

செ.ரமேஸ் வலிகாமம் மேற்குப் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளராகவும், திருமதி பே.சுகுமார் வலிகிழக்கு பிரதேசசபைக்கும், து.அகல்யா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கும், ச.சூரியகுமாரி மட்டக்களப்பு மாநகரசபைக்கும், ச.கமலகாந்த் வலி.வடக்கு பிரதேசசபைக்கும், ஆ. நித்திலவர்ணன் ஊர்காவற்துறை பிரதேசசபைக்கும் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர். (91,100)




புத்தளம் றோ.க.த.க பாடசாலையில் விடியல் - 02 சஞ்சிகை வெளியீட்டு விழாவில் - எம்.ரி.எம்.நபீரிடம் பங்குத்தந்தை நிஹால் லிண்டன் முதற்பெறுவதைக் காணலாம். (91)



வலி.தென்மேற்குப் பிரதேசசபை கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களுக்கான பிரியாவிடையின்போது பிரதேசசபை செயலர் பிரான்சிஸ் விக்டர் உரையாற்றுவதையும் மற்றும் ஊழியர்களையும் படத்தில் காணலாம். (48)



# விளையாட்டு அரங்கம்

## திருத்தி எழுதிய தீர்ப்புக்கள்



பிறைன் லாறா கிண்ணத்தில் முத்தமிட்டபடி

மினி உலகக் கிண்ணத்தை மேற்கிந்திய தீவுகள் அணி கைப்பற்றி ரசிகர்களின் எதிர்வு கூறல்களை சிதறடித்துள்ளது. 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் மேற்கிந்திய - இங்கிலாந்து அணிகள் மோதியதற்கு பிறகு மிகப் பெரிய சர்வதேச தொடர் ஒன்றின் இறுதிப் போட்டியில் இரு அணிகளும் மோதியதால் இந்தப் போட்டி கூடிய எதிர்பார்ப்பைத் தோற்றுவித்திருந்தது.

இதுவரை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றாத இங்கிலாந்து அணி, அதற்கு சரிநிகராக விளங்கும் - மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி ஆறுதலைத் தேடிக்கொள்ளும் என்ற அவர்களின் கனவுக்கு, சாவுமணி அடித்தது மேற்கிந்திய தீவுகள் அணி

இங்கிலாந்தைப் பொறுத்து இந்தத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகள் பங்குபற்றிய நட்வெஸ்ட் தொடரில் மேற்கிந்திய தீவுகளிடம் இருமுறை தோற்று இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்திருந்தது. இருப்பினும் அரையிறுதிப் போட்டியில் பலமிக்க அவுஸ்ரேலியாவை வீழ்த்தியதால், அவர்களின் மனோதிடம் அதிகரித்து காணப்பட்டது. அத்தோடு உள்ளூர் ரசிகர்களின் ஆதரவும் அவர்களுக்கு கைகொடுக்கும் என்பதனால் அவர்களுக்கே கிண்ணவாய்ப்பு அதிகமாக இருந்தது.

மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்தவரை தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளை சத்தம் சந்தடியில்லாமல் வெற்றி பெற்றது. இருந்தாலும், இந்தத் தொடரின் முன்பாக இங்கிலாந்துடன் விளையாடிய நான்கு டெஸ்ட் போட்டிகளையும் இழந்திருந்தது. அந்தத் தொடரில் ஆதிக்கம் செலுத்திய ஹார்மிசன், பிளின் ரொப் ஆகியோரின் பந்துவீச்சை எதிர்கொண்டு, இங்கிலாந்துக்கு ஈடுகொடுத்து ஆடுமா என்ற சந்தேகம் ஆரம்பத்தில் தோன்றியிருந்ததையும் தவிர்க்க முடியவில்லை.

ஆனால், இங்கிலாந்தை 217 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியபோது - அவர்களுக்கான வெற்றிவாய்ப்பு பிரகாசமானதாகவே தெரிந்தது. அதன்பிறகு ஆட்டத்தைத் தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியின் எட்டுவிக்கெட்டுக்கள் வீழ்த்தப் பட்டபோது இங்கிலாந்தின் கையே ஓங்கியிருந்தது.



ட்ரேஸ் கோதிக் கனவாகிப் போனதே

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் தான் 2003/04 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற அவுஸ்ரேலியாவுக்கான இறுதி டெஸ்ட் போட்டியில், 418 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி - 7 விக்கெட்டுக்களை இழந்து இறுதி நேர நெருக்கடிக்கு முகம் கொடுத்தபோது, பந்து வீச்சாளர்களான ஓமாரி பாங்ஸ்-வெஸ்பட் ட்ரேக்ஸ் ஜோடி மேற்கிந்தியத் தீவுகளை வரலாற்று வெற்றி பெற வைத்ததைப்போன்று - எங்கே மேற்கிந்திய தீவுகள் தோற்று விடுமோ என்ற ஒரு சந்தர்ப்பத்தில் தான் அணிக்கு ஆபத்பாந்தவரானது பிராட்ஷோ - பிரௌணி ஜோடி. 71 ஓட்டங்களைத் தங்களுக்கிடையே பகிர்ந்து இங்கிலாந்து கிண்ணத்தை விமானத்தில் பறக்கவிட காரணகர்த் தாவானது.

இந்த இறுதிப்போட்டி ஒருநாள் போட்டிகளில் சகலதுறை ஆட்டக் காரர்கள் அணியில் சேர்த்துக் கொள்வதன் அவசியத்தை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. இத்தனைக்கும் பிராட்ஷோவோ, பிரௌணியோ அனுபவஸ்தர்களோ அல்லது சகலதுறை ஆட்டக்காரர்களோ அல்ல. இருவருமே சர்வதேச கிரிக்கெட்டின் ஆரம்ப நிலையில் உள்ளவர்களே. இதுபற்றி அணித்தலைவர் லாறா கூறும்போது- வலைப்பயிற்சியில் ஈடுபடும்போதுகூட இந்த மாதிரி சிறப்பாக ஆடியதை நான் பார்த்ததில்லையென பிராட்ஷோ பற்றி அவர் கூறுகிறார்.

அத்துடன் மழையால் பல ஆட்டங்கள் இடைநிறுத்தப்பட்டு போட்டி முடிவுகள் எதிர்பாரா மாற்றத்தை உண்டு பண்ணியிருந்ததைப் போன்று அரையிறுதி ஆட்டங்களைக் குழப்பாத வர்ணபகவான் எங்கே எல்லாவற்றையும் சேர்த்து 2002 மினி உலகக் கிண்ண இறுதிப் போட்டிபோல் தனது கைவரிசையைக் காட்டி விடுவாரோ என்றொரு பயம் மனதில் இருந்தே வந்தது.

ஆனால், 25 வருடங்களுக்குப் பிறகு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் மகத்தான வெற்றியைப் பார்க்க அவரும் ஆசைப்பட்டாரோ என்னவோ இறுதிவரை காலநிலையில் நல்ல ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தார்.

- சர்மிளா.

## மூன்று முறைக்குள் அடங்குவார்களா?



கங்கூலி
கேள்விக்கென்ன வேலி

சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டங்களில் பல்வேறு சர்ச்சைகள் பல்வேறு பரிமாணங்களில் தொடர்ந்தும் நடந்து கொண்டே இருக்கின்றன. அதிலும் எல்லோரும் கூடுதலாக அதிருப்தியடைவது நடுவர்களின் தீர்ப்புகள் தொடர்பாகவேயாகும். அந்த வகையில் ICC பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, அணிகளின் ஆதங்கத்தில் இருந்தும், ரசிகர்களின் அதிருப்தியில் இருந்தும் தப்பிக்கொண்டு, நியாயம் சரியாகவே வழங்கப்படுகிறது என்று நிரூபிக்கப்படாதபாடுபடுகிறது. இந்தப் பாதையில் ICC யானது, தவிர்க்க முடியாதபடி நவீன தொழில்நுட்பங்களின் பக்கமே செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறது.

நடந்து முடிந்த ICC சம்பியன்ஷிப் போட்டிகளில் No Ball கண்காணிப்பை மூன்றாம் மத்தியஸ்தரிடம் விட்டதும், Bat, Pad பிடிகள் தொடர்பாக விக்கெட்டுகளுக்கும், மைதான மத்தியஸ்தர்களுக்கும் இலத்திரனியல் தொடர்பை ஏற்படுத்தியமையும் இந்த நோக்கத்தின் பாற்பட்ட தேயாகும். இந்த வகையில் இன்னொரு பரீட்சார்த்தத்தைச் செய்ய முனைகிறது ICC. இது சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா, சர்ச்சையைக் கூட்டுமா என்பது சுவா ரஸ்யமானதொரு விடயமாகத்தான் இருக்கப் போகிறது. அதாவது ஒரு இனிங்ஸில் மூன்று தடவைகள் மட்டும் மைதான நடுவரின் தீர்ப்பில் திருப்தி இல்லாவிட்டால், அணியினர் மூன்றாவது நடுவரிடம் அதாவது - தொழில்நுட்பம் - முறையிடலாம்.

இந்தவிடயம் இதுவரையில் பேச்சளவிலேயே இருக்கிறது. அடுத்த வருடம் ICC யின் முழு அளவிலான கூட்டத்தின்போது இது பற்றித் தீர்மானிக்கப்படும் போலவும் தெரிகிறது. இந்த விடயத்தில் ஒப்புதல் ஏற்பட்டால் அடுத்த வருடத்தில் நடைபெறவிருக்கும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இந்த விதி பரீட்சித்துப் பார்க்கப்படும்.



கிளென் மக்ரா
மோதலாம் வாறியா

ICC யானது நடுவரின் தீர்ப்புப் பற்றி விசேட ஆய்வுகளைச் செய்துள்ளது. அதன்படி நடுவர்கள் வினைத்திறன் மிக்கவர்களாகவே இருக்கிறார்கள் என்பதையும் தற்போதைய செயற்பாடுகளின் பெறுபேறு களின்படி 92% சந்தர்ப்பங்கள் சரியாகவே மத்தியஸ் தர்களால் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும், இதனை 94%மாக அதிகரிக்க வேண்டும் என்பதே தங்களது நோக்கம் என்றும் கூறியிருக்கிறார்கள் ICC யினர்.

என்றாலும் முன்னாள் பிரபல்யமான மத்தியஸ்தர் டிக்கிபேர்ட், மற்றும் சைமன் டஃபல் போன்றோர் தொழில்நுட்பத்தின் பக்கம் கூடுதலாகச் சார்வதற்கு விருப்பம் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். என்றாலும் கணினிக் கணக்கின்படி பல LBW முடிவுகள் நடுவரின் தீர்ப்போடு எதிர்மறையாகப் போயுள்ளமையை, அண்மைய ICC போட்டிகளில் ரசிகர்கள் தெளிவாகவே கண்டுள்ளனர். தொழில்நுட்பம் வெளிப்பட்ட வகைகண்டு ஆச்சரியப்பட்டுப் போயிருக்கிறார்கள். அப்படியானால் மைதான வீரர்கள் மைதான நடுவரின் முடிவைவிட, மூன்றாவது கண்ணின் கடைக்கண் பார்வையைத்தான் கூடுதலாக நம்புவார்கள் எனலாம்.

- நிர்மலன்.

## பார்க்குமிடமெங்கும் உன் சிவப்பு நிறம்

சீனா, சீனக்குடியரசு, பீஜிங் என்ற பெயர் ஏதென்ஸில் உலகம் பூராகவும் ஒலிக்கத் தொடங்கி இன்று வரையும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இதுவும் ஏதென்ஸ் விளையாட்டுத் திருவிழா தான். பராலிம்பிக்ஸ் என்று அழைக்கப்படும், இப்போட்டிகள் வலுக்குறைந்தவர்கள் பங்கு கொள்ளும் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளே.



மனதிலில்லை
ஊனம்

ஆரம்பத்திலேயே இங்கு சீனா, என்று குறிப்பிட்ட மைக்குக் காரணம் இந்தப் போட்டிகளில் வேறெந்த நாடும் எட்டிப்பிடிக்க முடியாத உச்சத்தில் சீனா சென்றுகொண்டிருப்பது தான். தடகளப் போட்டிகள், நீச்சல் போட்டிகள் என்ற துறைகளில் சீனா முற்று முழுதான ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளது. தடகளப் போட்டிகளில் சீனா 20 தங்கங்கள் உட்பட மொத்தம் 50 பதக்கங்களும், நீச்சல் போட்டிகளில் 17 தங்கம் உட்பட 38 பதக்கங்கள் பெற்று முன்னணியில் திகழ்கிறது. எனவே, இன்று விளையாட்டுத்துறையில் முதன்மைபெற்று விளங்கும் ஒரு நாடாக சீனா தன்னை நிருபித்துள்ளது. இரண்டாம் இடத்துக்கு ஐக்கிய இராச்சியத்தையும், மூன்றாம் இடத்துக்கு ஐக்கிய அமெரிக்காவையும் பின்தள்ளி வெகுமுதன்மை பெற்றிருக்கிறது சீனா. 141 பதக்கங்களுடன் சீனா முதலிடம் பெற 93 பதக்கங்களுடன் ஐக்கிய இராச்சியமும், 88 பதக்கங்களுடன் ஐக்கிய அமெரிக்காவும் இரண்டாம், மூன்றாம் இடங்களில் நிற்கிறது.

இதோடு சேர்ந்து இன்னொரு குறிப்பாக 12 ஆவது ஆசிய மகளிர் கனிஷ்ட கரப்பந்தாட்டம் பற்றியும் சேர்த்துக் கொள்ளலாம். இலங்கையில் நடைபெற்ற இந்தச் சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டிக்கு ஜப்பானும், சீனாவும் தகுதி பெற்றன. இதில் மூன்று நேர் செட்களில் சீனா ஜப்பானைத் தோற்கடித்து கிண்ணத்தை வென்று கொண்டது மட்டுமல்ல தக்கவைத்தும் கொண்டது. மூன்றாம் இடத்தைக் கொரியா பெற்றுக் கொண்டது. நான்காம் இடம் தாய்வானுக்கு (தாய்வான் சீனாவுக்கே சொந்தம் என்று ஒரு அரசியல் சர்ச்சை உண்டு)



தரத்தினில் குறைவில்லை

மொத்தத்தில் விளையாட்டு உலகில் இன்று சீனா என்ற பெயர் தவிர்க்கப்பட முடியாததாகிவிட்டது. இன்னும் என்னென்ன விளையாட்டுத் துறைகளில் என்னென்ன சாகசம் செய்யப்போகிறார்களோ சீனர் என்று பொறுத்திருந்து பார்ப்போம். அவர்கள் செய்வதெல்லாம் பிரமிப்பாக இருக்கிறது.

-ஜெயா.

# பரீட்சைகள் முடிவதில்லை


கில்கிறிஸ்ட் மத்தியஸ்தர் தேவையில்லை

நடைபெற்று முடிந்த ICC சம்பியன் கிண்ணத் தொடரில் நடுவர்களின் பணியை சுலபமாக்கவும், ஆட்டமிழப்பு தொடர்பான சர்ச்சைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும் ஒரு சில புதிய நடைமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

துடுப்பு மட்டையில் பந்துபட்டுச் செல்வது தொடர்பான தீர்ப்புக்களால் போட்டி முடிவுகளில் பாதிப்பு ஏற்படுவதுடன் தனிநபர் செயற்பாடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

துடுப்பு மட்டையில் பந்து பட்டு விக்கெட் காப்பாளரிடம் செல்லும் போது, நடுவரின் தீர்ப்பை எதிர்பாராமல் ஆடுகளத்தை விட்டு வெளியே செல்வதற்கு எல்லோரும் டெண்டுல்கரோ அல்லது அடம் கில்கிறிஸ்டோ அல்ல.

இதனால் தான் ICC போட்டி நடக்கும் போது விக்கெட்டுக்களில் "மைக்ரோ போன்" பொருத்தி றிஸீவரை நடுவர் தனது காதுகளில் மாட்டிக்கொள்ளும் வசதியை அறிமுகப்படுத்தியது. பந்து இலேசாக உராய்ந்தாலும் அதை நடுவரால் கேட்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தும், ICC அதைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமா என்பது கேள்விக்குறியே!

ஏனென்றால் 2003 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்துக்கான முன்னோடி நடவடிக்கையாக 2002 ஆம் ஆண்டு ICC சம்பியன் தொடரில் LBW தீர்ப்பை மூன்றாவது நடுவர் மூலம் மேற்கொண்டிருந்தனர். ஆனால் அந்தத் தொடர் முடிந்ததுமே அதை அப்படியே கைவிட்டதுடன் உலகக்கிண்ணத்திலும் அதை ஈடுபடுத்தவில்லை.

அதற்கு ICC உறுப்பினர்கள் கூறிய காரணம் - நடுவர்களுக்குப் போதிய தொழில்நுட்பஅறிவு இல்லாதிருப்பதுடன், அது பெருமளவான பணச்செலவை ஏற்படுத்தியதையும் எடுத்துக்காட்டியிருந்தனர்.

ஆனால், இந்தத் தொழில்நுட்பத்தை மீண்டும் அறிமுகம் செய்ய வேண்டிய தேவையை இந்த முறை நடந்த ICC கிண்ணப்போட்டிகள் சில நிருபித்துக் காட்டியுள்ளன.

குறிப்பாக அவுஸ்ரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடந்த அரையிறுதிப் போட்டியில் நடுவர்களின் சில LBW தீர்ப்புகளை உதாரணமாகக் கூறலாம்.

ட்ரெஸ்கோதிக் 5 ஓட்டங்கள் பெற்ற நிலையில் மக்ரா ஓர் LBW ஆட்டமிழப்பைக் கோரியிருந்தார். ஆனால் நடுவர் பிலிபோடன் அதை நிராகரித்துவிட்டார். அவ்வாறே விக்ரம் சோலங்கி 7 ஓட்டங்கள் பெற்றிருந்த போது ஜிலெஸ்பி LBW ஆட்டமிழப்பைக் கேட்டபோது நடுவர் ரூடி ஹோட்ஷன் அவருக்கு OUT என தீர்ப்பு வழங்கியிருந்தார்.

ஆனால் இவ்விரு LBW தீர்ப்புக்களையும் RE-PLAY இல் பார்க்கும் போது ட்ரெஸ்கோதிக்கின் காலில்பட்ட பந்து MIDDLE STUMP க்கு செல்வதையும், விக்ரம் சோலங்கியின் ஆட்டமிழப்புக்குரிய பந்து LEG STUMP க்கு செல்வதையும் காணக்கூடியதாக இருந்தது .அதாவது ட்ரெஸ் கோதிக்கின் Not out, out - விக்ரம் சோலங்கியின் out, Not out. இதைத் தொலைக்காட்சி வர்ணனையாளர்களும் சூட்டோடு சூடாக கூறி இருந்ததையும் கவனத்திலெடுக்க வேண்டும்.


ஸ்ரீவ் பக்னர் சிறப்பு சமாளிப்பு

எனவே பிலிபோடன் வழங்காத சரியான தீர்ப்பை ரூடி ஹோட்ஷன் தனது தவறான தீர்ப்பின் மூலம் வழங்கி அவுஸ்ரேலியர்களை சமப்படுத்தி விட்டார் என்றே கருத வேண்டியிருக்கிறது.

மேலும் அவுஸ்ரேலியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நடந்த போட்டியிலும், நியூசிலாந்தின் சகல துறை ஆட்டக்காரரான கிறிஸ் ஹெயின்ஸ்க்கு வழங்கப்பட்ட LBW தீர்ப்பும் சர்ச்சைக்குரியதே.

2002 ஆம் ஆண்டு ICC கிண்ணப்போட்டியொன்றில் மஹேல ஜெயவர்த்தனவுக்கு நடுவர் டேவிட் ஷெப்பேர்ட் LBW தீர்ப்பு மூலம் ஆட்டமிழந்ததாக கூறினார். பின்னர் தன் முடிவில் சந்தேகப்பட்டு மூன்றாவது நடுவரிடம் தீர்ப்புக்காக விடப்பட்டபோது அவர் Not out என்பது தெரியவந்தது. அதன் பிறகு மஹேலவை மீளவும் துடுப்பெடுத்தாட அழைத்ததும் இவ்விடம் நினைவு கூரத்தக்கது.

எனவே மூன்றாவது நடுவரிடம் இது போன்ற சர்ச்சைக்குரிய தீர்ப்புக்களை ஒப்படைக்கும் போது ஆட்டம் திசை மாறாமல் இருப்பதையும், தனிநபரின் சாதனையில் பாதிப்பு ஏற்படுவதையும் இயன்றளவில் தவிர்க்கலாம் என்பதும் கண்கூடு.

**-விமலன்.**

# அடிசறுக்கிய யானை

இங்கிலாந்தில் நடைபெற்ற மினி உலகக்கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்து அணிக்கெதிரான காலிறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவியதன் மூலம் தனது ரசிகர்களை ஏமாற்றிவிட்டது இலங்கை அணி.


பிளின்ரொப் இங்கிலாந்தின் இளவரசன்

சீரற்ற காலநிலை காரணமாக இரண்டாவது நாள் துடுப்பாட்டம் இடைநிறுத்தப்பட்டபோது இலங்கை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது.

டக்வேர்த் லூயிஸ் முறைப்படி இலங்கை அணி 24 ஓவர்களில் 145 ஓட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும். எனவே, ஓட்ட விகிதம் போதாமையால் இலங்கை அணி தோல்வியைத் தழுவிக் கொண்டது.

மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் ஏனைய அணிகளுக்கு சவாலாக அமையும் என எதிர்பார்க்கப்பட்ட இலங்கை அணி தோல்வியைத் தழுவிக் கொண்டதற்குப் பல காரணங்கள் உள்ளன.

இலங்கை அணித்தலைவர் மாவன் அத்தபத்துவின் தீர்க்கதரிசனமற்ற முடிவு, மோசமான களத்தடுப்பு மற்றும் சீரற்ற காலநிலை என்பன இலங்கை அணியின் தோல்விக்குக் காரணமாக அமைந்துவிட்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து இங்கிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடும்படி பணித்தது களநிலையில் பொருத்த மற்றதொன்றாகும். இலங்கை அணியைப் பொறுத்தவரையில் முதலில் துடுப்பெடுத்தாடுவதே சாதகமானது. இலங்கை அணி பெற்றிருந்த பெரும்பாலான போட்டிகளில் முதலில் துடுப்பெடுத்தாடியே வென்றுள்ளது. அண்மையில் இடம்பெற்ற ஆசியக்கிண்ணப் போட்டிகளின்போதுகூட இந்திய அணியைத் தாம் பெற்றுக் கொண்ட 228 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியமை குறிப்பிடததக்கது.

இந்தத் தன்மையை நன்குணர்ந்திருந்தும் அத்தபத்து தீர்க்க தரிசனம் இன்றியே களத்தடுப்பில் ஈடுபடமுடிவெடுத்தார்.

மேலும் இங்கிலாந்தில் தற்போது மழைக் காலமாகையால் மழை போட்டிகளைத் தடைசெய்யும் எனத் தெரிந்திருந்தும் அத்த பத்து களத்தடுப்பில் ஈடுபட்டமை மிகத்தவறானதாகும்.

இலங்கை அணியின் தோல்விக்கு மோசமான களத்தடுப்பே முக்கியகாரணமாகும். 104 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட பிளின்ரொப் 2 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் வழங்கிய மிகச் சுலபமான பிடியை மஹேல தவறவிட்டமையும், 66 ஓட்டஙகளைப் பெற்ற ட்ரெஸ்கோதிக் 12 ஓட்டங்களைப் பெற்றபோது வழங்கிய பிடியைச் சொய்சா தவறவிட்டமையும் இலங்கை அணியின் தோல்விக்கான பாரிய சறுக்கல்களாகும். இதேநேரம் கடைசி 6 ஓவர்களில் 78 ஓட்டங்களை இலங்கை அணியினர் விட்டுக்கொடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



விதியின் பிடியில்

என்னதான் இருப்பினும் இலங்கை அணி தன்னைப் புடம போடவேண்டிய இடங்கள் இன்னமும் உண்டு என்பதை இந்தப் போட்டித் தொடர் உணர்த்தியுள்ளது.

**- லெஸ்லி.**

# செரீனா இல்லாமல் ரெனிஸா

ICC சம்பியன்ஷிப் போட்டிகள் இலங்கையைப் பொறுத்தவரை, சீன ஓபன் ரெனிஸ் போட்டிகளை இரண்டாம் பட்சமாக்கிவிட்டது என்னவோ உண்மை. என்றாலும் ரெனிஸ் ஆர்வலர்கள் கண்ணுக்குள் எண்ணை விட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். அதனால் தான் கிரிக்கெட் போலவே ஆர்வத்துக்கு உரியதாகிவிட்ட மகளிர் ஒற்றையர் பிரிவு முடிவுகள் என்னவாகுமோ என்ற எதிர்பார்ப்பு இருந்தது. இப்போது மகளிர் ஒற்றையர் போட்டிகள் என்பது இருவல்லரசுகள் - ரஷ்யாவும், அமெரிக்காவும் மோதும் ஒரு யுத்தமாக மாறி ரெனிஸ் உலகின் சுவாரஸ்யமான கட்டத்தை அடைந்துள்ளது.


மரியா ஷரபோவா என்னம்மா கண்ணு

அதாவது அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற நால்வரில் மூவர் ரஷ்யர். ஒருவர் அமெரிக்கர்.

இந்த வகையில் பார்க்கும்போது ரஷ்ய வீராங்கனைகள், சீனாவில் நின்றுகொண்டு, அமெரிக்காவுக்கு பயமுறுத்தல் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் ஒற்றையர் காலிறுதியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, ஜெலினா ஜென்சோவிக்கைத் தோற்கடித்து, உண்மையில் காயம் காரணமாக ஜெலினா விலகினார், அடுத்த கட்டத்துக்குச் சென்றுள்ளார். இன்னொரு போட்டியில் யூ.எஸ்.ஓபபன் சாம்பியன் ஸ்வெட்லானா குஷ் நெட் சோவா ஆர்ஜென்ரீனா வீராங்கனையை வீழ்த்தினார்.

அடுத்தகட்டமாக இறுதிப் போட்டிக்கு யாருடன் மோதுவது என்பதை அரை இறுதியில் தீர்மானிக்கும் ஆட்டம் விம்பிள்டன் சம்பியன் ஷரபோவாவுக்கும் யூ.எஸ்.சம்பியன் ஸ்வெட்லானா குஷ்நெட்சோவாவிற்கும் இடையில் அமைந்தது. மறுபுறம் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற நிலையில், அதாவது வில்லியம்ஸ் தனது ரஷ்யப் போட்டியாளரான வேரா சுவனறேவாவை 6-2, 6-3 என்று தோல்வியடையச் செய்து அரையிறுதிக்கு தகுதி பெற்ற நிலையில் இந்த இரண்டு ரஷ்ய வீராங்கனைகளில் யார் செரினாவைச் சந்திக்கப் போகிறார்கள் என்பது பெரும் எதிர்பார்க்கையாயிற்று. 17 வயதான ஷரபோவாவிற்கு கொஞ்சம் போதாத காலமோ என்னவோ, 19 வயதான ஸ்வெட்லானா இறுதிப் போட்டிக்குத் தயாரானார். இந்த நிலையில் இறுதி முடிவைத் தீர்மானிக்க அமெரிக்காவும், ரஷ்யாவும் நேருக்கு நேராக நின்றன. அமெரிக்காவில் வைத்தே கிண்ணம் வென்ற ஸ்வெட்லானா ஒருபுறம், அண்மைக்காலத்தில் பல கிண்ணங்களைத் தவறவிட்ட அமெரிக்கரான செரினா வில்லியம்ஸ் மறுபக்கம், யுத்த சன்னதத்திற்கு கேட்கவும் வேண்டுமா? அதுவும் இன்னொரு வல்லரசான சீனாவில் ஆரம்பத்தில் சிறிது தளர்வைக் காட்டிய செரினா வேகம் கொண்டெழுந்தபோது, அதனை ஸ்வெட்லானாவால் சமாளிக்க முடியவில்லை. உண்மையில் முதல் செட்டில் ஸ்வெட்லானாவே வெற்றி பெற்றார். ஆனால், இரண்டாம் செட்டில் மிக உக்கிரமாகப் போராடிய செரினா வெற்றியைத தன்பக்கமாக்கிக் கொணடார். மூன்றாவது செட் ஆரம்பமானபோதே செரினாவின் தன்னம்பிக்கையும் உயர்வாகவே இருந்தது. மிகப் பரபரப்பான இந்த் செட்டின் முடிவில் 4-6, 7-5, 6-4 என்ற வகையில் சொனா கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார். அதுவும் முதன் முதலில் நடைபெற்ற சீன ஓபன் ரெனிஸ் கிண்ணம் அவருக்காயிற்று. இந்த முதன்மை என்றும் முதன்மை. ஏனெனில் இது மாற்றமுடியாத முதனமை.



**- மரியா.**




# கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்ற சிறுவர்தின நிகழ்வு

கிளிநொச்சியில் நேற்றுமுன் தினம் சிறுவர் தின நிகழ்வுகள் வெகு சிறப்பாக இடம்பெற்றன.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக தலைவர் ராஜன தலைமையில் சிறுவர் தின நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக - சிறுவர்கள, முதன்மை விருந்தினர்கள் அனைவரும் சந்திரன் ஞாபகார்த்த பூஙகாவிலருந்து மங்கள வாத்திய இசையுடன் மண்டபத்துக்கு அழைததுவரப்பட்டனர்.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்துறை துணைப்பொறுப்பாளர் மாதவன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியை - முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து 125 முன்பள்ளிகளின் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து சிறப்புரைகள், சிறுவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. அடுத்து முதியோர்கள் - சிறுவர் களால மலர்மாலை அணிவித்துக்கௌரவிக்கப்பட்டு, கௌரவ பரிசில்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம், உள்ளூர் அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், முன் பள்ளிகளை நிர்வகிக்கும் நிறுவனங்கள் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை வெகு சிறப்பாக நடாத்தி யமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வைத்தியசாலையில் முக்கியமான சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மருத்துவமனையில் குறிப்பாக ஆஸ்துமா நோய்க்கான மருந்து வகைகள், பாம்புக்கடி மற்றும் நஞ்சு அருந்தியோருக்கு ஏற்றும் ஊசி மருந்தும் முற்றாக முடிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் குறிப்பிட்ட சில நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சியிலுள்ள மாவட்ட மருத்துவமனையின் மருந்துக் களஞ்சியத்திலும் இந்த மருந்துகள் முற்றாக முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அடம்பன்குள நலன்புரி நிலையத்திலுள்ள குடும்பங்கள் அடிப்படைவசதியற்ற நிலையில்

வவுனியா அடம்பன்குளம் நலன்புரி நிலையத்தில் 310 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா செட்டிக்குளம் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள விடப்பன்குளம் நலன்புரி நிலையத்தில் இரணைஇலுப்பைக்குளம், காக்கைக் குளம், ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 310 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

## பஸ்தரிப்பு நிலையம் இன்றி மக்கள் பெரும் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஜெயந்திபுரம், நாச்சிக்குடா ஆகிய பிரதேசங்களில் பஸ்நிலையம் இன்றி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும் மக்கள் மர நிழல்களில் நின்று பயணத்தை மேற்கொண்டனர். தற்போது மழை காலம் ஆகையால், மரத்தின் கீழும் நிற்கமுடியாத நிலையில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## கடற்தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து பூநகரியில் கடற்தொழிலாளர் சங்கம் ஆராய்வு

பூநகரிப் பிரதேசத்திலுள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்துக் கடந்த புதன்கிழமை ஆராயப்பட்டது.

பூநகரிப் பிரதேச செயலக மணடபத்தில் பிரதேச செயலர் மா.சிறீஸ குமார் தலைமையில் நடைபெற்ற கடற் தொழில் சங்கம், கடற்றொழில் சமாசம் ஆகிய நிர்வாக உறுப்பினர்களுக்கு இடையேயான கலந்துரையாடலின்போதே இந்த விடயங்கள் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலீல் மீனவர்களின் பிரச்சினை தொடர்பாகவும், அதனைத் தீர்க்கும் வழிமுறைகள் பற்றியும் ஆராயப் பட்டது. அத்துடன் முட்டையிடும் நிலையிலுள்ள நண்டு போன்ற கடல்வாழ் உயிரினங்கள் அழிக்கப்படுவது குறித்தும் ஆராயப்பட்டது.






மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட வன்னிப் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மன்னார் வலயப் பணிப்பாளர் எம்.எம் மரிக்கா அழைதது வரப்படுவதை முதலாம் படத்திலும், மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்

## முள்ளியவளை பிரதேசத்தில் கால்நடைகளின் தொல்லை

முள்ளியவளை பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை நீண்டகாலமாக அதிகரித்து வருகின்றது.

முள்ளியவளை பொதுச்சந்தை, காட்டுவிநாயகர் கோயிலடி, வற்றாப்பளை கோயிலடி, மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள இடம், கணுக்கேணி பிரதானவீதி ஆகிய இடங்களில் கட்டாக்காலி கால்நடைகள், கூட்டம் கூட்டமாக நின்று இடையூறுகளை ஏற்படுத்துவதால், வீதி விபத்துக்கள் ஏற்படவேண்டிய சூழ்நிலை உருவாகுகின்றது. இதனால் இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

## பிராட்டிகுளம் பறங்கி ஆற்றின் பாலம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - பிராட்டிகுளம் பிரதான வீதியில் அமைந்துள்ள பறங்கி ஆற்றின் பாலம் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் மோசமாக சேதமுற்றுக் காணப்படுகிறது.

1962 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தப் பாலம், குன்றும் குழியுமாக காட்சியளிக்கிறது. எந்தவொரு வாகனமும் இந்தப் பாலத்தின் ஊடாக பிரயாணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

பிராட்டிகுளம் கிராமத்திலுள்ள 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, இந்தப் பாலத்தின் ஊடாகவே பயணம் செய்ய வேண்டியுள்ளது. தற்போது மழை காலம் ஆகையால், இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

## மன்னார் மாவட்டத்தின் பெரியபாலம் 100 மில்லியன் செலவில் புனரமைப்பு

மன்னாரிலுள்ள முக்கிய பாலமான பெரிய பாலம் நூறு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் சேதமுற்றுக் காணப்படும் இந்தப் பாலத்தை புனரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேலும் மன்னாரிலுள்ள 7 பாலங்களை புனரமைப்புச் செய்வதற்கு பிரித்தானிய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## பூந்தோட்டம் நலன்புரி மக்களுக்கு பழுதடைந்த நிவாரண அரிசி

வவுனியா - பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வாழ்ந்துவரும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண அரிசி - பழுதடைந்துள்ள நிலையிலுள்ளதாக அந்த நிலையத்தில் வாழும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பல முறை முறைப்பாடு செய்யப்பட்டும் இதுவரை எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்படும் இந்த அரிசி நீண்டகாலத்துக்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்டு களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டது என்றும், இதன் காரணத்தால் இந்த அரிசி பழுதடைந்திருக்கலாம் என்றும் இங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அரச அதிகாரிகளிடம் கேட்டபோது, தகவல் எதனையும் பெறமுடியவில்லை.

## சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மல்லாவியில் விளையாட்டுப் போட்டி

(மல்லாவி)

பாண்டியன்குளம் - துணுக்காய் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினரால் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட 15 வயதுக்கு உட்பட்டோருக்கான விளையாட்டுப் போட்டி - கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு - மல்லாவி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பாரதிநகர் வலயப் பொறுப்பாளர் அகக்கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் மயூரன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

இந்த விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டிகளும், பரிசளிப்பு நிகழ்வுகளும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மலசலகூடம் அமைப்பு

(மன்னார்)

மன்னார் அந்தோனியார் புரத்தில் 25 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மன்னார் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், டி.ஆர்.ரீயின் நிதியுதவியுடன் மலசலகூடங்களை அமைத்து வருகிறது.

### மீனவர் சங்க கட்டடத்துக்கு காணி

(மன்னார்)

மன்னார் உப்புக்குளம் மீனவர் சங்க கட்டடம் அமைப்பதற்காக, நிரந்தர காணி வழங்கப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாக நிரந்தரக் கட்டடம் இன்றி இயங்கிவந்த இந்த சங்கத்துக்கு, நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு இந்தப் பகுதி பிரதேச செயலர் காணி ஒன்றை வழங்கியுள்ளார்.

### குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

(மன்னார்)

மன்னார் பள்ளமடுவில் இருந்து விடத்தல்தீவு - செல்லும் வீதி மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது.

இதன் காரணமாக இந்தப் பகுதி மக்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

### திறப்பு விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கால்நடைகளுக்கான சிகிச்சையுடன் கூடிய தீவன நிலையம் நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிலையம் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 17 ஆம் ஆண்டு நினைவாக திறந்துவைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இந்த நிலையத்தை திறந்து வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது.

### புனரமைப்பு

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலை 100 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த மருத்துவமனையில் மூன்று மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டு, நவீன சிகிச்சைக் கூடங்களும் அமைகக்கப்படும் என பிரதி மாகாண சுகாதார சேவைகளின் பணிப்பாளர் ஜோர்க் ரதன் தெரிவித்தார்.

### சந்தை இன்றி மக்கள் சிரமம்

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பகுதி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், பொதுச்சந்தை இல்லாமையால் இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

கடந்தகால போரினால் இடம் பெயர்ந்து, தற்போது இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும், தமக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்யவும் முடியாத நிலையிலுள்ளனர்.

### அரை ஏக்கர் காணி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் காணியற்றோருக்கு அரை ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் - வித்தியாபுரம், கூழாமுறிப்பு, நெடுங்கேணி ஆகிய வீதிகளின் இருபக்கங்களிலும் உள்ள காணிகளே ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தால் அந்தப் பகுதியில் வசிக்கும் காணியற்றோருக்கு வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதுஇலார்*
*மரம் மக்கள் ஆதலே வேறு*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியின் சுயத்தை வெளிப்படுத்தும் பேராசிரியர் பீரிஸின் கருத்துக்கள்...

இனப்பிரச்சினைக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளின் மூலம் சுமுகமாக அரசியற் தீர்வொன்றைக் காணும் முயற்சியில் அரசாங்கமோ ஜனாதிபதியோ ஆத்மசுத்தியுடன் ஈடுபடவில்லை. இது தொடர்பாக, ஜனாதிபதி இரட்டைவேடம் போடும் ஒருவராகவே- சந்தர்ப்பசூழலுக்கு ஏற்ப முன்னுக்குபின் முரணான கருத்துக்களை முன்வைத்துக் குழப்பும் மனேபாவம் கொண்டவராகவே உள்ளார் என்பது குறித்து பலதடவைகள் இப்பகுதியில் தெளிவாகவே விளக்கியிருந்தோம்.

சிலவேளை நாம் கூறிய கருத்தியல் விளக்கங்களை, பக்கச்சார்புடன் கூடிய - பிரசார உத்தியுடன் கூடிய வார்த்தைகளாக ஒரு சிலர் விமர்சித்ததும்கூட உண்டு.

ஆனால், அது குறித்து இப்போது பெரும்பான்மைச் சமூகத்தவர்களிடமிருந்தே நாம் தெரிவித்திருந்த அதே மாதிரியிலான கருத்துக்கள் வெளிப்படையாக வரத்தொடங்கியுள்ளன.

குறிப்பாக, ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகரும் நம்பிக்கைக்குரிய நண்பரும், நிதியமைச்சரும்... இப்படியே பல முக்கிய பொறுப்புகளை வகித்தவரும் பொ.ஐ.முன்னணி ஆட்சிக் காலத்தில் இனவிவகாரத்துக்குப் பொறுப்பாக விளங்கி, அதிகாரப் பரவலாக்கல் தீர்வுப்பொதியைப் பல வருடங்கள் சுமந்து திரிந்து, உலகெங்கும் பிரசாரம்செய்து களைத்தவரும், தற்போது எதிர்க்கட்சிப் பிரமுகராக இருப்பவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் அண்மையில் ஒரு செய்தியாளர் மாநாட்டில் கூறிய கருத்துக்களைக் கவனத்தில் கொள்வது நல்லது என்றே தோன்றுகிறது.

"இன விவகாரத்திற்கு சமாதானத்தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை முயற்சிகளை இழுத்தடிப்பு நாடகமாக்கி விட்டுள்ளார் ஜனாதிபதி" என்று, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக பட்டென்று உறுதியாகக் கூறியுள்ள பேராசிரியர் பீரிஸ்- "இந்த வகையிலான ஜனாதிபதியின் அணுகுமுறையானது சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்து விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும்கூட நம்பிக்கையை இழக்கவைத்துவிட்டது" என்றும் அவர் விளக்கியுள்ளார்.

மீண்டும் சமாதான முயற்சிகள் உறுதியுடன் ஆரம்பிக்கக் கூடும் என்ற நம்பிக்கையை அனைவரிடமும் அற்றுப்போகச் செய்துவிடக் காரணமாகியுள்ள ஜனாதிபதியின் 'இரட்டைவேட' அணுகுமுறை குறித்து பீரிஸ் அவர்கள் மிகத்தெளிவாகவே விளக்கமளித்துள்ளார் என்றே கூறவேண்டும்.

ஒருபுறம் சர்வதேச சமூகத்தைப் 'பேய்க்காட்ட'தான் சமாதானம் மீது பெரும் அக்கறையுடன் செயற்படுவதாகக் காட்டிக் கொள்ள முனையும் ஜனாதிபதி, மறுபுறம் ஆட்சியைத் தக்க வைக்க ஜே.வி.பியுடன் முரண்படக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில், சமாதானத்திற்கு நேரெதிரான முகமூடியொன்றையும் அணிந்துகொண்டு வேறொரு நாடகத்தையும் ஆடிவருகிறார் என்பதே இன்றைய யதார்த்தமாகவும் உள்ளது.

ஜே.வி.பியையும் ஏனைய சமாதான எதிர்ப்புப் பேரினவாத சக்திகளையும் சமாளிக்கவே - சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிக்கும் மூலோபாயத்தின் முக்கிய அம்சமாகவே, தேசிய ஆலோசனைச்சபை என்ற யோசனையை இப்போது முன்வைத்துள்ளார் என்று கூறியுள்ள பேராசிரியர் பீரிஸ் அவர்கள் இதனை ஒரு 'பம்மாத்து' நடவடிக்கை என்று வர்ணித்துமுள்ளார்.

ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற அமைப்புகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபைத் திட்டத்திற்கு எதிரான பிரசாரத்திற்குப் பயந்து, பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது தொடர்பாக எந்தவிதமான தீர்மானத்திற்கும் வரமுடியாது தவிக்கும் ஜனாதிபதி - வெறுமனே காலத்தை இழுத்தடித்து சர்வதேச சமூகத்தையும் நாட்டுமக்களையும் ஏமாற்றும் யுத்திகளையே கையாளத்தொடங்கியுள்ளார்.

இடைக்கால நிர்வாக அதிகார சபையோசனைகளை ஆரம்பிக்கத் தயார் என்று ஒருமுறை வெளிப்படையாகக் கூறிவிட்டு, மறுநாளே அதனை மறுக்கும் சுபாவம் கொண்ட ஜனாதிபதியால் சமாதான முயற்சிகளை எந்தக் காலத்திலும், எந்தக் கட்டத்திலும் உறுதியான தீர்மானத்துடன் முன்னெடுக்க முடியாததென்பதே உண்மையாகும்.

இதனைத்தான் அமைச்சர் பீரிஸ் தனது கருத்துக்களின் மூலம் தெளிவாக்க முயன்றுள்ளார் என்றே கூறவேண்டும்.

ஜனாதிபதியின் மன ஓட்டத்தை, செயற்பாட்டு நேர்மையின் பொய்மைத்தன்மையை, இனவிவகாரம் தொடர்பான அவரது அரசியல் நிலைப்பாட்டை பீரிஸை விடவும் அறிந்தவர் வேறு எவருமில்லை என்றே கூறவேண்டும்.

வரலாற்றில் முதற்தடவ்வயாக - இனவிவகாரம் தொடர்பாக ஒரு இறுதியும், உறுதியுமான தீர்வுக்கு வருவதற்கு இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்த விடயத்திலிருந்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க எதிர்க்கட்சி முழுமையான ஆதரவை தர முன்வந்துள்ள சாதகநிலையைப் பயன்படுத்தி, பேச்சுக்களைத் தொடர ஜனாதிபதி பின்னடிப்புச் செய்வது ஏன்? என பீரிஸ் தொடுத்துள்ள கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியவர் ஜனாதிபதியே ஆவார்.

உண்மையில் பீரிஸ் அவர்கள் கூறுவதுபோன்று, சமாதானம் என்ற பேரில் ஏமாற்று நாடகம் ஒன்றை அரங்கேற்றும் சதித்திட்டத்துடனேயே ஜனாதிபதி தனது அரசியல் காய்களை நகர்த்திவருகிறார் என்பதை பேராசிரியர் பீரிஸ் அவர்களின் பேச்சுக்களின் மூலம் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது.

தன்நாட்டு மக்களைப் பலகாலமும், சர்வதேசத்தை சில காலமும் ஜனாதிபதியால் ஏமாற்றக்கூடியதாக இருக்கலாம். ஆனால், தமிழ்மக்களை சமாதானத்தின் பேரால் இனியும் ஏமாற்றலாம் என அவர் நினைத்தால் அது அவருக்குத்தான் ஏமாற்றமாக முடியும்.

# நாடும் நடப்பும்




# கல்வியில் மீள் வலுவூட்டலே கிராமங்களில் அவசிய தேவை!

## கலாநிதி சபா. ஜெயராசா தெரிவிப்பு

யாழ்.மாவட்டம் உள்ளிட்ட இலங்கையின் கிராமப்புறங்களிலே பாடசாலை மாணவர்களது இடைவிலகல் அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே, கல்வியில் மீள் வலுவூட்டல் என்பது இன்றைய கிராமங்களில் அவசர தேவையாக உள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை விரிவுரையாளர் கலாநிதி சபா.ஜெயராசா நாவற்குழி மகா வித்தியால யத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எந்தவொரு தொழிலுக்கும் கல்வி அவசியமாகின்றது. கல்வியறிவு பயன்படுத்தப்படும்போதுதான், உற்பத்தியில் வினைத்திறன் அதிகரிக்கப்படுகிறது. இந்த அடிப்படையிலேதான் உலகவங்கி பல சிபார்சுகளைக் கல்வி அமைப்புக்களில் முன்வைத்துள்ளது. கல்வி அமைச்சுக்கூட அதற்கேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

என்னதான் கஷ்டங்கள் இருந்தாலும், பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கட்டாயமாக, ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பிவைக்க வேண்டிய பொறுப்பிலுள்ளனர். பாடசாலைகள் வெறுமனே அறிவூட்டல், நல்லொழுக்கத்தைப் போதித்தல் மட்டுமன்றி, ஒரு சிறந்த மனிதனாகும் வாய்ப்பையும் - திறனையும் பெற்றுக்கொடுக்கின்றன. எனவே, நாள் தவறாது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதானது விழுமியம் அவர்களிடையே வளர்த்தெடுக்கப்படுவதற்கு அவசியம்.

மின்சார வசதியின்மை பிள்ளைகளது கற்றலைப் பாதிப்பதாகவே இருக்கும். ரஷ்யப் புரட்சியின் பின்னர்கூட அங்கு, மின்சாரம், கல்வி இரண்டுக்குமே முன்னுரிமை வழங்கித்தான் திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

உலக வங்கிப் பிரதிநிதிகள் எமது பகுதிப் பாடசாலைகளில் செய்த ஆய்வு ஒன்றைத் தொடர்ந்து, எமது மாணவர்களிடையே அதிகளவில் ஆளுமைக்குறைபாடு இருப்பதாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். எனவே நாம் எமது மாணவர்களது ஆற்றலில் ஆளுமையை வளர்த்தெடுக்கக்கூடிய செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தவேண்டும். இது அதிபர், ஆசிரியர்களது பொறுப்பாக இன்று எழுந்து நிற்கின்றது. பிள்ளைகளிடையே பல்வேறு ஆற்றல்கள் மறைந்து கிடக்கின்றன. இந்த ஆற்றல்களை வெளிக்கொண்டுவந்து, அவர்களது ஆளுமைப் பண்புகளை வளர்த்தெடுக்கும் செயற்பாடுகளில் ஆசிரியர்கள் ஈடுபடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (31)

# இடைக்காடு, வளலாய் பகுதிகளுக்கு சுரேஸ் எம்.பி. குறைகேள் விஜயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன் இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களுக்குச் சென்று மீள்குடியேறிய மக்களின் நிலைமைகளைக் கேட்டறிந்தனர். அதி உயர்பாதுகாப்பு வலயத்தை அண்மித்த, மீள் குடியேறிய மக்கள் இராணுவத்தினரால் தாம் அன்றாடம் அடையும் இன்னல்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினார்.

இருபதுக்கும் மேற்பட்ட குடும்பத்தினரைத் தமது வீடுகளை விட்டு வெளியேறுமாறு இராணுவம் நாளாந்தம் வற்புறுத்தி வருவதாகவும், ஏனையோர் தங்களது வீடுகளில் சுவர் கட்டவோ, மலசலகூடம் கட்டவோ அல்லது எந்தவொரு திருத்தவேலை செய்வதற்குமோ இராணுவம் அனுமதி மறுத்திருக்கின்றது.

அது மாத்திரம் அல்லாமல், அங்கு ஓர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தைக் கட்டவும், இராணுவத்தினர் அனுமதியளிக்க மறுத்துவருவதால், அவர்கள் நீண்ட தூரம்சென்று நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

கூரை இல்லாத வீடுகளும், சுவர் இல்லாத வீடுகளும், மலசலகூடம் இல்லாத வீடுகளுமாக இவர்களது வாழ்க்கை நிலைகுறித்து - இயன்றவரை விரைவில் - இராணுவத்தினருடனும், பாதுகாப்பு அமைச்சருடனும், ஜனாதிபதியுடனும் பேசித் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அந்த மக்களுக்கு சுரேஸ் பிரேமச்சந்திரன் உறுதியளித்தார்.

## தடுப்புக்காவலில் உள்ள சந்திரகுமார் தாக்கப்பட்டதாக எந்தத் தடயமும் இல்லை

### சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்திரகுமாரைப் பொலிஸார் தாக்கியமைக்கான எந்தத் தடயமும் இல்லை என யாழ்.போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி யாழ். பொலிஸ் நிலையத்தில் தாக்குதலுக்குள்ளான சந்திரகுமார் (வயது 23) என்பவரைப் பார்வையிடச் சென்றபோதே, மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளாகியிருந்தனர்.

கைதி தாக்கப்பட்டமை தொடர்பாக மருத்துவ பரிசோதனையை நடத்தி, அறிக்கை தருமாறு நீதிமன்றம் கோரியிருந்தது.

இதனையடுத்து கைதியை மருத்துவ பரிசோதனைக் குட்படுத்தியிருந்த யாழ்.போதனாவைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி - கீழே விழுந்ததால் அவரது காலில் மட்டும் ஏற்பட்டகாயம் ஒன்று காணப்படுகின்றபோதும் உடலில் வேறு எந்தக் காயமும் கிடையாது என இவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு அறிவிக்குமாறு யாழ். மாவட்ட நீதிவான் நீதிமன்றின் நீதிபதி ரி.விக்னராஜா நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார். (ப)

## மாகாண தமிழ் இலக்கிய விழா யாழ்.இந்து மகளிர் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் எட்டுப்பேர் ஆளுநர் விருதுவழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

வ.சிவசுப்பிரமணி(மட்டக்களப்பு), மு.கனகசபை (யாழ்ப்பாணம்), கே.எஸ்.சிவகுமரன்( மட்டக்களப்பு), பி.ஸ்ரனிஸ் லாஸ் (யாழ்ப்பாணம்), எஸ்.எஸ்.எம்.கனிபா, (மட்டக்களப்பு), ம.சண்முகலிங்கம்(யாழ்ப்பாணம்), கை.செல்லத்துரை(முல்லைத்தீவு), இராசடாட்சராதேவி( யாழ்ப்பாணம்) ஆகியோரே விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி மதியம் நல்லூர் ஆலய முன்றலில் இருந்து, தமிழ் கலாசார பாரம்பரிய முறைப்படி அழைத்து வரப்பட்டு, யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ள தென்னிலங்கையில் இருந்தும் பல கல்விமான்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

வாரநோக்கு

யாழவன்

# பிரசாரப் போரை வலுப்படுத்த வேண்டிய நிலையில் தமிழ்த்தரப்பு

"கோழி கூவி பொழுது விடியாது" என்பது போல, சிலர் போட்ட கூக்குரல்கள் இன்று எதுவிதமான



பலனுமின்றிப் பிசுபிசுத்துப் போய் விட்டன. பல திசைகளில் இருந்தும் சில புல்லுருவிகளின் குரல்கள் எழுந்த போதும், கனடா வாழ் தமிழ் மக்கள் பிரமாண்டமான அளவிலே ஒரு பொங்குதமிழ் நிகழ்வை நடத்தி முடித்திருக்கிறார்கள்.

தமிழர் தாயகத்திலே நடத்தப் பட்ட பொங்குதமிழ் நிகழ்வுகளை விட, இது ஒரு வகையிலே உலக ரீதியாக ஒரு தாக்கத்தை ஏற்படுத் தியிருக்கும் என்பது கவனத்திற் குரிய விடயம்.

ஏனெனில், ஒரு இனத்தினுடைய தாயக நிலப்பரப்பிலே அந்த இனம் தனது உரிமைகளுக்காக அஹிம்சை வழிப் போராட்டம் ஒன்றை நடத்து வது என்பது ஓரளவுக்கு முடிந்த காரியம்.

ஆனால், இன்னொருவருடைய நாட்டிலே புலம்பெயர்ந்து இருந்து கொண்டு, அந்த நாட்டிலேயே ஒரு பெரியளவிலான போராட்டத்தை நடத் துவது என்பது அதிலும் அந்த நாட்டின் முக்கிய அரசியல் பிரமுகர் களும் அதில் கலந்துகொண்டு ஆதரவாக உரையாற்றுவது என்ப தும், சாதாரணமான விடயமல்ல. இது உலகரீதியிலே மிகுந்த கவ னத்தை ஈர்க்கக்கூடிய விடயமாகும்.

ஆனாலும், அத்தனை கவன ஈர்ப்பை ஏற்படுத்தும் தாக்கத்தைவிட இந்த அஹிம்சைப் போராட்டத்தைத் தவறானது, தேவையற்றது என அதே இனத்தைச் சேர்ந்த - அதுவும் அந்த இனத்தின் உயரிய மதிப்பைப் பெற் றுள்ள ஒரு கட்சியின் தலைமைப் பதவியைக் கட்டிப்பிடித்துக்கொண்டு இருக்கும் ஒருவர் விடும் கதையானது மேலும் கவனத்தை ஈர்க்கக்கூடியது.

ஆனால், அத்தகையதொரு நிலைமை கனடா பொங்கு தமிழைப் பொறுத்தவரையிலே ஏற்படாமற் போனமையானது தமிழ் மக்களின் அதிஷ்டமேயாகும்.

இங்கு குறிப்பிடப்படும் விடயம் எதுவெனில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான ஆனந்த சங்கரி - கனடா அரசுக்கு விடுத்த கோரிக்கையே ஆகும்.

அதாவது பொங்குதமிழ் நிகழ் வானது விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டுவதற்காகவே நடாத்தப் படுகிறது.

எனவே, கனடா அரசு அதனைத் தடைசெய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். ஆனால், கனடா அரசோ ஆனந்த சங்கரியை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. ஆனந்த சங்கரி தானாகவே தன் மதிப்பை மீண்டும் ஒருமுறை கெடுத் துக்கொண்டார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்த லுக்கு முன்பாகவும் - பலவிதமான, விரோதமான அறிக்கைகளையும, கருத்துக்களையும் வெளியிட்டு; இறு தியிலே வெறும் ஐயாயிரம் வாக்கு களை மட்டுமே பெற்று படுதோல்வி யைத் தழுவிக்கொண்ட சங்கரி தமிழ் மக்களால் அவர்களுக்கான அரசியற் களத்திலிருந்து தூக்கி வீசப பட்டார்.

ஆனால், விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல, தேர்தல் நீதியாக நடக்கவில்லை எனக் கூக்குரல் போட்ட சங்கரி - யாழ். குடாநாட்டுத் தேர்தலை ரத்துச் செய்யும்படியும் கோரிக்கை விடுததார். ஆனால் அவரது கருத்து எதுவுமே கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இறுதியில் நாட்டைவிட்டு வெளி யேறித் தற்போது கனடாவிலே தற் காலிகமாகக் குடியேறியுள்ள சங்கரி- தான் இருப்பதை தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது என்பதற்காக அடிக்கடி சில அறிக்கைகளை விடுத்து வருகிறார்.

அவற்றுள் பெரும்பாலானவை விடுதலைப் புலிகளுக்கும், தமிழ்த் தேசியத்துக்கும் எதிரானவையே ஆகும். தானும் ஒரு தமிழன் என் பதை மறந்து, மீண்டும் தவறிழைக் கும் சங்கரி - திருந்த முயற்சிக்கா விட்டாலும் மேலும் பழுதடையாமற் தானும் இருக்கலாம்.

ஆனால், சங்கரி அதற்குத் தயா ராகவில்லைப்போல தெரிகிறது. "சா பிணம் மருந்து தின்னாது", "கெடு குடி சொற்கேளாது" என்பது போலவே தற்போது சங்கரியின் நிலைப்பாடா கும்.

முன்னர் ஒரு காலத்திலே அரசி யலிலே பெறுமதியான பாத்திரம் வகித் துக் கொண்டிருந்த சங்கரி - நுண





லும் தன வாயால் கெடும் என்பது போல, தனது தவறை உணர்ந்து தேசிய வலுப்படுத்தலிலே பங்கு கொண்டால் மன்னிக்கும் மனப்பாங்கு கொண்ட தமிழ் மக்கள் எவ்வாறு முன்னாள் ஆயுதக்குழுத் தலைவர் களை மன்னித்து, இன்று நாடாளு மன்ற உறுப் பினர்களாக்கியுள்ளார் களோ அதே போல ஆனந்த சங்கரி யையும் மன்னிப் பார்கள். இதனைச் சங்கரி உணர்ந்து கொள்ளவேண்டும்.

கோழி கூவி பொழுது விடியாத கதையாகிப்போன சங்கரியின் கருத் துக்கள் - இன்று வலுவற்றுப் போய் விட்டன.

சங்கரியின் கருத்துக்களை எண் ணியோ அல்லது சங்கரியின் தற் போதைய அரசியல் வாழ்வு பற்றியோ அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் தமிழ் மக்களுக்கு இன்றில்லை. அவர கள் இன்று அரசியல் ரீதியாக எவ் வளவோதூரம் முன்னேறி விட்டார் கள்.

வன்னியிலிருந்து ஜெனிவா சென்று, அங்கு தமிழ் சட்ட வல்லுநர் கள் பலருடனும் கலந்துரையாடி திட் டங்களையும், மேற்கொண்ட நட வடிக்கைகள், நகர்வுகளை மேற்கொள ளக் கூடிய காய் நகர்த்தல்கள் தொடர்பாக விரிவாகப் பேசும் அள வுக்கு இன்று தமிழ் மக்களுடைய அரசியல் வளர்ச்சிபெற்று, வலுப் பெற்றுள்ளது.

சங்கரி போன்றோருடைய கருத்துக கள் எடுபடக்கூடிய ஒரு காலம் இருந் தது என்னவோ உண்மைதான்.

ஆனால், காலங்கள் என்றும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அதுபோலவே தமிழ் மக்களுடைய அரசியலும் இன்று சர்வதேச ரீதியிலே வித்தியாச மானதொரு நிலையைப் பிடித்துள் ளது.

அதனாலேயே கதிர்காமர் உள் ளிட்ட அரசியல் மேதாவிகளின் வஞ் சகத்தனங்கள் இன்று அவ்வளவாக உலக அரங்கிலே எடுபடவில்லை.

அத்தோடு, தமிழ் மக்களுடைய, உண்மையான பிரதிநிதிகளுடைய கருத்துக்களும் இன்று உலக அரங் கிலே ஒலிக்கத் தொடங்கியுள்ளமை யும் ஒரு ஆரோக்கியமான மாற்ற மாகும்.

அரசு ஒப்பற்ற ரீதியாக புலிக ளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதி ராக வெறுமனே ஆயுதப் போரையே நிறுத்தியுள்ளது.

ஆனால், அதனைக் காட்டிலும் மும்முரமாகப் புலனாய்வுப் போர், பிர சாரப் போர் என்பவற்றை வேறு சில நாடுகளோடு இணைந்து முன்னெ டுத்து வருகிறது.

எவ்வாறு தமிழ் மக்கள் அரசின் ஆயுதப் போரை எதிர்கொண்டு வெற்றி பெற்றார்களோ, அதேபோல பிரசாரப் போரையும் வெற்றிகொள்ள வேண் டிய அவசிய தேவை இன்று எழுந் துள்ளது.

அதனாலேயே சந்தர்ப்பம் கிடைக் கும் போதெல்லாம் ஈழ விடுதலைப் போராட்டத்தின் நியாயம் பற்றியும், தமிழ் மக்களுடைய சமாதான ஆவல், அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வு என் பன பற்றியும் தமிழ்த் தலைவர்கள் பேசி வருகிறார்கள்.

இந்தப் பணியை விடுதலைப் புலி களுடைய பொறுப்பாளர்களும் மேற் கொண்டு வருகின்றனர். இதன் கட்ட மாகவே தற்போது தமிழ்ச் செல்வன் குழுவினர் வெளிநாடு சென்றுள்ள னர்.

அத்துடன், கனடாவில் நடந்து முடிந்த பொங்குதமிழ் நிகழ்வுக ளைப்போல, வேறு நிகழ்வுகளின் ஊடாகவும் பிரசாரப் போரை வலுப் படுத்த வேண்டிய காலத்தின் கட்டா யம் இன்று தமிழ் மக்களின் முன்னே விரிந்து கிடக்கிறது.

இதனை ஒவ்வொரு தமிழனும் புரிந்துகொள்ள வேண்டும். உள்நாட்டி லும், வெளிநாட்டிலும் என உலகத் தின் திசையாவும் பிரசாரப் போர் கள், பீரங்கிகள் என முழங்க வேண் டும்.

இந்தப் புனிதப் போரிலே இயன்ற வரை எல்லோரும் கைகொடுக்க வேண்டும். பல்கலைக்கழக மாணவர் கள், அறிஞர்கள் என கல்விச் சமூ கத்தினரும் இதில் அணிசேர வேண் டும்.

வருடத்துக்கு ஓரிரு தடவை சில நிகழ்வுகளின்போது மட்டும் பொது மக்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடும் நிலை மாறி, நாளாந்தம் மக்களை அணுகி உண்மை நிலைப்பாட்டை விளக்கும் நடவடிக் கைகளில் ஈடுபடவேண்டும்.

அப்போதுதான் சந்திரிகா, சங்கரி, கதிர்காமர் போன்றோரின் கருத்துக் களால் ஏற்படும் சிறுசிறு சலசலப் புக்களைக் குறைக்கவும், தடுக்கவும் முடியும்.

தொடர் அரசியற் படுகொலை களை புலிகளே மேற்கொள்கின்றார் கள். இதனை ஏற்றுக்கொள்ளமுடி யாது எனப் பேசிவரும் ஜனாதிபதி - படுகொலைகளை காரணமாக வைத்து சர்வதேசத்தை திசை திருப்ப முனைகிறார்.

உள்வீட்டு பூசல்கள் காரணமாக நிதமும் கொலைகளுக்குப் புலிகளே காரணம் எனக் கூறி, புலிகள் மீது சேறுபூசி, சர்வதேச எதிர்ப்பைத் தோற்றுவிக்க முயல்கிறார் சந்தி ரிகா.

அத்துடன், அண்மையில் இலங்கை வந்த தகாபர்.பிளாக் எனும் அமெரிக்க உளவுத்துறை அதிகாரி யொருவர் கொழும்பிலிருந்து வெளி யாகும் ஆங்கில தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலே, ஒசாமா பின் லேடனின் அல்-கொய்டா இயக்கத் துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக தான் கருது வதாகக் கூறியுள்ளார்.

இது அமெரிக்காவின் கபடத்த னத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஆலோசனைகள், திட்டங்களை பரி மாறுதல் போன்ற விடயங்களிலே அல்-கைடாவுக்கும், விடுதலைப் புலிக



ளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறும் அந்த அதிகாரி - சமாதானப் பேச்சுவார்த்தைகள் இவ்வாறு தொடர்ந்து தடைப்பட்டு இருக்க அனு மதிக்க முடியாது எனவும் கூறியுள் ளார்.

இது புலிகளுக்கு அவர் விடுக் கும் எச்சரிக்கை மட்டுமல்ல, எப்படி யாவது இலங்கை விடயத்துக்குள் ஆழமான மூக்கை நுழைக்க நினைக் கும் அமெரிக்காவின் நாடகமும் ஆகும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரை புலிகளுக்கு எதிராக தோற்று விக்க அமெரிக்கா தருணம் பார்த்துள் ளது. இதனையே அல்-கொய்டா - விடுதலைப் புலிகள் நெருக்கம் எனும் புதிய கதை விடுகையானது புலனாகின்றது.

ஆனால், இந்தக் கதை விடு கைக்கு எதிராக இதுவரை எந்த தமிழ் அரசியற் தலைவர்களுமே கருத்து வெளியிடவில்லை. இது அவர்களுடைய கவனத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

அதிலும் சில தமிழ் ஊடகவிய லாளர்கள் தாங்கள் தான் அமெ ரிக்கா என்பதுபோல அமெரிக்கா - இலங்கை விடயத்திலே தலையி டாது. அதனை அமெரிக்க மக்கள் விரும்பமாட்டார்கள் என்றெல்லாம் எழுதி வருகின்றனர்.

இது தமிழ் மக்களை தூங்க வைக்கும் கருத்துக்களாகும். இது மிகப்பெரிய வரலாற்றுத் தவறுகள் ஏற்பட வழிவகுத்துவிடும்.

எனவே, தற்போதைய உண்மை யான அரசியல் நிலைகளையும், அவை பின்னான செய்திகளையும் தமிழ் ஊடகங்கள் மக்களுக்குத் தெரிவுபடுத்தி, பொதுமக்களை விழிப் படையச் செய்யவேண்டும்.

அப்போது தான் எந்த வழியிலும் எவரும் எம்மை வெற்றிகொள்ள முடி யாத நிலையை நாம் எட்டமுடியும். ●

## நல்லொழுக்கதின விழா

(உடுவில்)

போரூட் அமைப்பின் சர்வதேச நல்லொழுக்கதின விழா இன்று நண்பகல் 2 மணிக்கு மருதனார்மடம இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சக்தி போரூட் அமைப்பின் தலைவர் சா.தங்கராசா தலைமையில நடை பெறும் இந்த விழாவிற்கு வலி.தெற்கு பிரதேசசபை செயலர் திருவாகரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள வுள்ளார். சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், தெல்லிப்பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கட்டுரை, கவிதை, பேச்சு, சித்திரப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் "சக்தி" மலர் வெளியீடு, கலைநிகழ் வுகள் என்பனவும் இடம்பெறும். (101)

## உள்ளூராட்சி சபை ஊழியர்களுக்கு இன்று கலந்துரையாடல்

அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைந்த சம்மேளத்தினால் உள்ளூராட்சி சபைகளில் கடமை யாற்றும் வருமான மேற்பார்வை யார்கள், வருமான பரிசோதகர் களுக்கான கலந்துரை யாடல் இன்று காலை 10 மணிக்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளில் நடைபெறும் அரச நியமனங்கள், பிரயாணப்படிவங்கள், பதவியுயர்வு, பயிற்சி, என்பவற்றிற் கும் வடக்கு - கிழக்கில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினைகள், வேறு பாடுகள் என்பன இந்தக் கலந்துரை யாடலில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கான அழைப்பிதழ் கடிதங்கள் யாழ் மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச சபைகளுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்வதுடன் கருத்துரை யினையும் வழங்குமாறு சம்பந்தப் பட்டவர்களை அதன் இணைப்பாளர் சந்திரகாசன் தெரிவித்தார். (44)

## அஞ்சல் அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் உள்ள அஞ்சல் நிலையங்களில் பொறுப் பாகக் கடமையாற்றும் அஞ்சல் அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் புதன்கிழமை காலை 11 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள தமிழர் நிர்வாக சேவை நடுவப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து அஞ்சலகங்களின் பொறுப்பான அஞ்சல் அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் இலக்கிய விழா உறுப்பினர்கள் கூட்டம்

தமிழ் இலக்கிய விழா சம்பந்தமாக உறுப்பினர்களுக்கான கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை பி.ப 4.00 மணிக்கு யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டலு வல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருமதி.என்.ஸ்ரீதேவி கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணம்

# தென்மராட்சி வலய மட்டத்தின் உதைபந்தாட்ட இறுதி முடிவுகள்

தென்மராட்சி வலய மட்டத்தில் அறுபதுக்கு மேற்பட்ட விளையாட்டுக் குழுக்கள் பங்குபற்றிய காற்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டிகளும் , பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் கொடிகாமம் அரசினர் வித்தியாலய இராசா விளையாட்டு மைதானத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் மு.வ.செல்வராசா தலைமையில் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டிகளில், யாழ்.மாவட்டத்திலேயே முதன்முதலாக 12 வயதுப் பிரிவினரின் இரண்டு குழுக்கள் இறுதிப் போட்டியில் வெகு சிறப்பாக மோதிக் கொண்ட நிகழ்வு விறுவிறுப்பாக அமைந்திருந்தது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியினதும், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தினதும் மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றி 1:0 என்ற கோல் கணக்கில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 12 வயதுக் குழுவினர் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

இந்தப் பிரிவில் இரண்டாம் இடத்தை, வீரசிங்கம் மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை வரணி மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

14 வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில், இறுதிப் போட்டியில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவர்களும் வரணி மகா வித்தியாலய மாணவர்களும் மோதிக் கொண்டனர். இதில் 1:0 என்ற கோல் கணக்கில் டிறிபேக் கல்லூரி முதலிடம் பெற்று வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தை வரணி மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை கைதடி முத்துக்குமாரசாமி மாணவர்களும் பெற்றுக்கொண்டனர்.

16 வயதினருக்கான இறுதிச் சுற்றுப் போட்டியில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவர்களும், நாவற்குழி மகாவித்தியாலய மாணவர்களும் மோதிக் கொணடனா.

இறுதி நேரம்வரை இரு பாடசாலை மாணவர்களுமே கோல் எதனையும் போடாத நிலையில் தண்டனை உதைச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டபோது, ஒரு கோல்லை அடித்து வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவர்கள் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

இந்தப் பிரிவுப் போட்டிகளில் இரண்டாம் இடத்தை நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்களும், மூன்றாம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களும் பெற்றுக் கொண்டனர்.

18 வயதுப் பிரிவிற்கான இறுதிச் சுற்றில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களும், டிறிபேக் கல்லூரி மாணவர்களும் மோதிக் கொண்டனர்.

இந்தப் போட்டியில் 3:1 என்ற கோல் கணக்கில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றினர். இரண்டாம் இடத்தை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களும் மூன்றாம் இடத்தை கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவர்களும் பெற்றுக் கொண்டனர். (31)




# பெல்ஜியம் ரெனிஸ்; கிளைஸ்டர்ஸ் வெற்றி!



பெல்ஜியத்தில் நடைபெற்றுவரும் ரெனிஸ் காலிறுதிப் போட்டியில் அந்நாட்டு வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ், பல்கேரிய வீராங்கனை மலீவாவுக்கு எதிராகப் பந்தைத் திருப்பும் காட்சி.

இதில் கிளைஸ்டர்ஸ் 6:3, 6:4, என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

# பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகள் இன்று பெஷாவரில் மோதல்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான், சிம்பாப்வே, இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையேயான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது.

இதன் இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று பெஷாவரில் நடைபெறவுள்ளது.

இதில் பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகள் மோதவுள்ளன. 6 ஆம் திகதி பாகிஸ்தான் - இலங்கை இடையேயான ஆட்டம் நடைபெறும். முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் சிம்பாப்வேயை வென்று 2 புள்ளிகளுடன் உள்ளது. இரு அணி வீரர்கள் விபரம் வருமாறு.

**பகிஸ்தான்**

இன்ஸமாம் (கப்டன்), யுகானா, யுனுஸ்கான், அப்ரிடி, மாலிக், உல்ஹசன், சல்மான்பட், பாசித் கான், அக்தர், முகமதுசமி, மொயின் கான்.

**சிம்பாப்வே**

தைபு (கப்டன்), சிக்கும்புரா, இப்ராகிம், ஹொண்டோ, முப்பரிவா, என்காலா, ரேயின்ஸ்போாட், சிபந்தா, ரெய்லர், கிரிமர், மார்க்வெர்மூலன்.

# இந்திய – பங்களாதேஷ் போட்டி விபரம் அறிவிப்பு!

(புதுடெல்கி)

இந்திய கிரிக்கெட் அணி இந்த மாதம் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதனையடுத்து தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப் பயணம்செய்து விளையாடும்.

இதனைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட்அணி டிசம்பர் மாதம் பங்களாதேசில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் ஆட்வுள்ளது. இரு அணிகள் இடையேயான போட்டி வருமாறு.

| | | |
|---|---|---|
| டிசம்பர் | 09-13 ஆம் திகதி வரை | முதல் டெஸ்ட் |
| டிசம்பர் | 16-20 ஆம் திகதி | 2 ஆவது டெஸ்ட் |
| டிசம்பர் | 23 ஆம் திகதி முதல் | ஒருநாள்போட்டி |
| டிசம்பர் | 25 ஆம் திகதி 2 ஆவது | ஒரு நாள் போட்டி |
| டிசம்பர் | 27 ஆம் திகதி 3 ஆவது | ஒருநாள் போட்டி. |

அமெரிக்கப் படையினர் - இஸ்லாமியத் தீவிரவாதிகளிடையே

# ஈ-ராக்கின் சமறாப் பகுதியில் மோதல்கள் தொடர்கின்றன



ஈராக்கில் சமறா நகரில் அமெரிக்கப் படையினருக்கும், இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும் இடையிலான மோதல் நேற்றும் தொடர்ந்தது.

ஈராக்கியத் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சமறா நகரத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக நேற்றுமுன்தினம் அமெரிக்கப்படைகள் கடும் தாக்குதலை ஆரம்பித்தன.

சமறா நகரை மீண்டும் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதற்கு அமெரிக்கப் படைகள் கடும் தாக்குதலை நடத்துகின்ற போதும், தீவிரவாதிகள் வீதிகளின் குறுக்கே தடைகளை ஏற்படுத்தி அமெரிக்கப் படைகள்மீது தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்பொழுது சமறா நகரத்தின் பெரும்பான்மையான பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அமெரிக்கப் படையினர், 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 80 தீவிரவாதிகளைத் தாம் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஆனால், கொல்லப்பட்டவர்களுள் - பெண்கள், குழந்தைகள் மற்றும் அமெரிக்கப் படையினரும் அடங்குவதாக சமறா நகர வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இதேசமயம் பலூஜா நகரில் அமெரிக்கப் போர் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் - 13 பேர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

பலூஜா நகரில் அபுமுசாப் சர்காவி தலைமையிலான தீவிரவாதிகள் தங்கியிருந்த கட்டடங்கள் மீதே, தாம் தாக்கு தல்களை மேற்கொண்டதாகத் தெரிவித்த அமெரிக்கப் படைகள், தாக்குதல் இடம்பெற்ற சமயம் பொதுமக்கள் எவரும் சம்பவ இடங் களில் இருக்கவில்லை எனத் தெரிவித்தன.

இதேசமயம் இந்தோனேசிய அரசினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெமா தீவிரவாதிகளின் தலைவர்களுள் ஒருவரான பஸீரை விடுதலை செய்தால், தம்மால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு இந்தோனேசியப் பெண்களையும் விடுதலை செய்வதாக ஜெமா தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

# மனித குளோனிங்குக்கு தடைவிதிக்க வேண்டும்!

## பாப்பரசரின் பிரதிநிதி தெரிவிப்பு

(வத்திக்கான்)

குளோனிங் முறையில் மனிதர்களை உருவாக்குவதற்கு முழுமையான அளவில் தடை விதிக்க வேண்டும் என்று வத்திக்கான் அதிகாரி பிஷப் கியோவன்னி வலியுறுத்தியுள்ளார்.

உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மத குருவான போப் பாண்டவரின் தலைமை அலுவலகம் வத்திக்கான நகரில் உள்ளது. இது சுய ஆதிக்கமுள்ள நகர நாடு ஆகும். வத்திக்கானுக்கு, ஐ.நா. சபையில் பார்வையாளர் அந்தஸ்து 1964 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இப்போது இருக்கும் போப்பாண்டவர் 2 ஆம் ஜோன்போல் 25 ஆண்டுகளுக்கு முன்பு ஐ.நா. பொதுச் சபைக்கு வந்திருக்கிறார்.




ஐ.நா.பொதுச்சபையின் வருடாந்த 2 வாரக் கூட்டத்தில் வத்திக்கான் பிரதிநிதியாக செயலாளர் அந்தஸ்திலுள்ள ஆர்ச் பிஷப் கியோவன்னி லஜோலோ கலந்து கொண்டு பேசினார்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்ததையும், தீவிரவாதிகள் மீது ஒரு தலைப்பட்சமர்க இராணுவ நடவடிக்கை எடுத்ததையும் வெளிப்படையாகக் குறிப்பிடாமல் அவர் பேசினார்.

இது பாதுகாப்பான உலகத்துக்கு நம்மை அழைத்துச் செல்லாது. ஈராக்கிலும் சரி அதற்கு வெளியிலும் சரி நடக்கும் சம்பவங்கள் இதைத்தான் நமக்கு சுட்டிக் காட்டுகின்றன. எப்படி இருந்தபோதிலும் ஈராக்கில் ஜனநாயகத்தையும், இயல்பான நிலையையும் கொண்டு வர ஈராக்கின் புதிய அரசை ஆதரிப்பது தவிர்க்க முடியாதது.

சர்வதேச தீவிரவாதத்தை ஒடுக்க அனைத்து நாடுகளும் ஒன்று சேர்ந்து பாடுபடவேண்டும். ஒருங்கிணைந்த பலநோக்கு அணுகு முறை மூலம்தான் தீவிரவாதத்தை ஒடுக்க முடியும். ஒரு தலைப்பட்சமான அரசியலால் சர்வதேச தீவிரவாதத்தை ஒடுக்க முடியாது.

மதங்களுக்கு இடையே பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். இதற்கு ரோமன் கத்தோலிக்க திருச்சபை உதவத் தயாராகவிருக்கிறது.

குளோனிங் மூலம் மனிதர்களை உருவாக்குவதற்கு உலக அளவில் தடை விதிக்கப்படவேண்டும். இதற்காக சர்வதேச மாநாடு ஒன்றை நடத்த வேண்டுமென ஆர்ச் பிஷப் கியோ வன்னி லஜோலோ கூறினார்.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்; ஹெரிக்கு ஆதரவு அதிகரிப்பு!



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரிக்கு ஆதரவு பெருகியிருப்பதாக கருத்துக் கணிப்புகள் மூலம் தெரியவருகிறது.

குடியரசுக் கட்சியின் வேட்பாளரும், தற்போதைய ஜனாதிபதியுமான ஜோர்ச் புஷ்ஷும், ஜோன் ஹெரியும் தொலைக்காட்சிப் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந்த விவாதத்தை அடிப்படையாக வைத்து பல்வேறு தொலைக்காட்சிகள் - அமெரிக்க மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தின.

ஏ.பி.சி தொலைக்காட்சி நடத் திய கருத்துக்கணிப்பில் - ஜோன் ஹெரியின் விவாதமே நியாயமாகவும், சாதுரியமாகவும் இருந்தது. அவருக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதாக பெரும்பாலானவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜோன் ஹெரிக்கு ஆதரவாக 45 சதவீதத்தினரும், ஜோர்ச் புஷ்ஷுக்கு ஆதரவாக 36 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர். வெற்றி வாய்ப்பில் இழுபறி நிலை ஏற்படும் என்று 17 சதவீதம் பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சி.என்.என். நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் - ஜோன் ஹெரிக்கு 46 சதவீதமும், புஷ்சுக்கு 21 சதவீதமும் கிடைத்துள்ளது.

இதேபோல் சி.பி.எஸ். நெட்வோர்க் நடத்திய கருத்துக் கணிப்பில் ஜோன் ஹெரிக்கு 44 சதவீதமும், புஷ்ஷுக்கு 26 சதவீத ஆதரவும் கிடைத்துள்ளது.

# 2 பெண்கள் உட்பட 10 பேர் ஈராக்கில் கடத்தப்பட்டனர்!




ஈராக்கில் 10 பேரை தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். அவர்களில் 2 பேர் பெண்கள். அந்த 2 பேரும் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள். ஏனைய 8 பேரில் 6 பேர் ஈராக்கியர்கள், 2 பேர் லெபனானைச் சேர்ந்தவர்கள்.

இந்த 10 பேரையும் இஸ்லாமிய இராணுவம் என்ற பெயரில் செயற்படும் தீவிரவாதிகள் தான் கடத்திச் சென்றனர்.

இந்தத் தீவிரவாதிகள்தான் 2 பிரெஞ் நிருபர்களைக் கடத்தியவர்கள். கடத்தப்பட்ட 10 பேரும் ஈராக்கிலுள்ள !மின்சாரக் கம்பனியில் பணியாற்றிவந்தனர்.

இந்தச் செய்தியை அல் - ஜசீரா தொலைக்காட்சி வெளியிட்டது. அதில் காட்டப்பட்ட காட்சியில் 3 பணயக் கைதிகள் காட்டப்பட்டனர். முகமூடி அணிந்த 2 தீவிரவாதிகள் துப்பாக்கியை வைத்தபடி இருந்தனர். தீவிரவாதிகளின் கோரிக்கை என்ன என்பது தெரியவில்லை.

இந்த 10 பேரையும் தீவிரவாதிகள் எங்கே இருந்து எப்போது கடத்தினர் என்பதும் தெரியவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சிறப்புற நடைபெற்று முடிந்த 'நமது ஈழநாடு' ஆண்டு விழா!

'நமது ஈழநாடு' நிறுவனத்தின் இரண்டாம், ஆண்டு நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பும் நேற்று யாழ். ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

நேற்று மாலை 2.00 மணியளவில் நமது ஈழநாடு நிர்வாக இயக்குநர் சிவமகாராசா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் மங்கள விளக்கை யாழ் மாவட்ட அரசியற் துணைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், பேராசிரியர் சண்முகதாஸ், யாழ்.மாநகர ஆணையாளர் க.குணராசா, நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து நடந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை பேராசிரியர் சண்முகதாஸ் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் ஆகியோர் ஆற்றினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், மாவைசேனாதிராசா, சுரேஸ்பிரேமச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சிறப்புரைகளை காங்கேசன்துறை மக்கள் வங்கி கிளைமுகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி, சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம், யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா மாவைசேனாதிராசா, மா.க.ஈழவேந்தன் ஆகியோர் ஆற்றினர். இதன் பின்னர் நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனம் நடத்திய சிறுகதை சஞ்சிகை மேற்பிரிவு, கீழ்ப் பிரிவு, புகைப்படப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பெருமளவான வாசகர்கள் இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

(படங்கள் 4 ஆம் பக்கத்தில்)

# காமினி பொன்சேகாவின் இறுதிச்சடங்கு இன்று!

காலஞ்சென்ற பிரபல நடிகரும் கலைஞருமான காமினி பொன்சேகாவின் இறுதிக் கிரியைகள் இன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

காலஞ்சென்ற காமினி பொன்சேகாவின் பூதவுடல் ஜாஎல பிரதேசத்தில் உள்ள அவரது இல்லத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு எடுத்துவரப்பட்டது. பூதவுடலுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர்.

இன்று பிற்பகல்வரை அவரது இல்லத்தில் கலைஞர்கள் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவர். பி.பகல் 2 மணியளவில் அவரது பூதவுடல் சுதந்திர சதுக்கத்தை நோக்கி எடுத்துச் செல்லப்படும். மாலை 5 மணிக்கு தகனக் கிரியைகள் இடம் பெறும்.

அவருக்கு மரியாதை செலுத்தும் முகமாக இன்று சகல திரையரங்குகளும் மூடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய ஆலோசனை சபையை ஹெல உறுமயவும் பகிஷ்கரிப்பு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் பேச்சு நடத்துவது தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கூட்டப்படவுள்ள தேசிய ஆலோசனைச் சபையில் தமது கட்சி அங்கம் வகிக்கப் போவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்தது.

அரசாங்க சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால விடுத்துள்ள அழைப்பை நிராகரித்துள்ள ஜாதிக ஹெலஉறுமய அது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

இந்தக் கடிதத்தில் - இந்தக் கூட்டம் வெறும் ஆலோசனைக் கூட்டமாகவே இருக்கும். இப்படிப்பட்டதொரு ஆலோசனை சபையை தயாரிக்க முன்னர், அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து தமிழ் தீவிரவாதம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாக சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான எந்த வொரு நடவடிக்கையும் ஹெல உறுமய ஆதரிக்காது.

இதேவேளை, அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனைகளுடன் தான் பேச்சு நடத்தச் செல்ல வேண்டும் என்றும் ஹெல உறுமைய தெரிவித்துள்ளது.

# ஹெல உறுமய எம்.பியை சந்திக்க திருமலை உண்ணாவிரதிகள் மறுப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விரும்பினால் வடக்குக் கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் தமிழர்களை வடக்கு கிழக்கிற்கு அனுப்பி வைக்கத் தாம் தயாராக இருப்பதாக சிங்கள பேரினவாத இயக்கமான ஹெல உடு சவிய தெரிவித்துள்ளது.

மகரகமவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பின் திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவற் படையினரை விடுதலை செய்யக் கோரி இடம் பெற்றுவரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக - நேற்று திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்தின் முன்னே ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது உரையாற்றிய ஹெல உடு சவியவின் செயலாளர் நாலிங்க விஜயசிங்காவே இவ்வாறு தெரிவித்தார்.

அங்குஅவர் மேலும் தெரிவித்ததாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் என்றுமே அமைதியை விரும்பவில்லை. அதனையே ஊர்காவற் படையினரைக் கைதுசெய்த சம்பவம் எடுத்துகாட்டுகிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் ஹபரணைக்கு அப்பால் தமிழர்களும், தமிழீழ விடுதலைப்புலிகளும் வருவதற்கு அனுமதி வழங்கக் கூடாது எனவும் தெரிவித்தார்.

இதே சமயம் உண்ணாவிரதத்தில் ஈடுபடுவோரைச் சந்திக்கச்சென்ற ஜாதிக ஹெலஉறுமய நாடாளு மன்ற உறுப்பினரான கொலன்னாவ சிறிசுமங்கள தேரோவைச் சந்திக்க உண்ணாவிரதிகள் மறுத்துவிட்டனர்.

தமது பிரச்சினையை அரசியல் கட்சிகள் தமது சுயலாபத்திற்குப் பயன்படுத்தவேண்டாம் என்றும், அவ்வாறு பயன்படுத்துவதைத் தவிர்க்கும் முகமாகவே தாம் ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கவில்லையென்றும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (04)

## மன்னாரில் பாதுகாப்பு வலயம்

# பிரகடனப்படுத்தும் திட்டம் நேற்றுமுன்தினம் ஒத்திவைப்பு!

(மன்னார்)

மன்னார் வளைகுடாவை பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்துவது தொடர்பாக ஆராய - நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த கூட்டம், அங்கு நிலவிய அசாதாரண சூழலால் முடிவுகள் எதுவுமின்றி ஒத்திவைக்கப்பட்டது.

மன்னார் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக்கூட்டத்துக்கு மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் வருகை தந்திருந்தபோதும் - மன்னாரில் இடம்பெற்ற பதற்றநிலை காரணமாக மீனவர் சங்கப் பிரதிநிதிகளில் அநேகர் கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மன்னார் ஆயர், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி இந்த விடயம் தொடர்பாக - கொழும்பில் கூட்டத்தை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வாய்க்கு வந்தபடி பேசுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்!

## கூட்டணிக் கட்சிகளுக்கு சந்திரிகா உத்தரவு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் குறித்து அரசின் பங்காளிக் கட்சிகள் எந்தக் கருத்துக்களையும் கூறக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா பணித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை தாமதிப்பதற்கு விரும்பவில்லை. மீண்டும் சமாதான முயற்சிகளை விரைவாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன்.

சமாதான முயற்சிகளை விரைவில் ஆரம்பிக்கும்போது - அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பது அவசியமாகும். சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் வாய்க்குவந்தபடி பேசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என ஜனாதிபதி கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# எம்.பிக்களுக்கு வழங்கப்படும் பென்சனை நிறுத்துவதற்கு ஜே.வி.பி பிரேரணை!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இளைப்பாற்றுக் கொடுப்பனவை ரத்துச் செய்யும் பிரேரணை ஒன்றை அரசாங்கத்திடம் ஜே.வி.பி. சமர்ப்பித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் அரசு சமர்ப்பிக்கவுள்ள அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பாக நிதியமைச்சர் சரத் அமுனுகமவிடம் ஜே.வி.பி சமர்ப்பித்துள்ள பிரேரணையிலேயே இந்த விடயமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத்தின்படி நாடாளுமன்ற உறுப்பினராக 5 வருடம் கடமையாற்றிய அரசியல்வாதி ஒருவர் இளைப்பாற்று கொடுப்பனவை பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் கொடுப்பனவு ரத்துச்செய்யப்பட வேண்டும் என ஜே.வி.பி.தனது பிரேரணையில் முன்வைத்துள்ளது.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்திற்கான ஜே.வி.பி. 36 பிரேரணையை நிதியமைச்சர் சரத் அமுனுகமவிடம் சமர்ப்பித்துள்ளதாக ஜே.வி.பி.யின் பேச்சாளர் தெரிவித்தார். (தே)

### விரைவாக...

தியை ஏற்படுத்த இரு பகுதியினரும் எவ்வளவு விரைவாக பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்ப முடியுமோ அவ்வளவு விரைவாக திரும்புமாறு நாம் இரண்டு பகுதியினரையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

### படையினர்....

தீர்மானிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசலயன் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார். இதன் காரணமாகவே குறிப்பிட்ட சந்திப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பாக இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக அதிகாரிகள் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே உத்தேச சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

## தேசிய ஆலோசனைக் குழுவில்

# பங்கேற்பதற்கு முன்னர் ஜனாதிபதியுடன் சந்திப்பு!

## முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

(கொழும்பு)

அரசாங்கம் சமாதான முன்னெடுப்புகளுக்காக அமைக்கத் திட்டமிட்டுள்ள தேசிய சமாதான ஆலோசனை சபையில் பங்கேற்பதற்கு முன்னர், ஜனாதிபதிசந்திரிகாவுடன் சந்திப்பு ஒன்றுக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது

நேற்று முன்தினம் இரவு கூடிய காங்கிரஸின் அரசியல் உயர்பீடம் இதற்கான முடிவை எடுத்துள்ளது. இதனையடுத்து நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்

இதில் உத்தேச ஆலோசனை சபை தொடர்பாக தாம் ஜனாதிபதியிடம் சில விளக்கங்களை பெற வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிகமான முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற்ற கட்சி என்ற அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தூதுக்குழு ஒன்று பங்கேற்ற வேண்டும் என்பதை தமது கட்சி வலியுறுத்தி வருவதை ரவூப் ஹக்கீம் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதியின் உத்தேச சமாதான் ஆலோசனைச் சபை தொடர்பாக அது செயற்படும் விதம், சமாதான முயற்சிகளில் அது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் என்பவை குறித்து தமக்கு விளக்கமின்மை இருப்பதாக தெரிவித்துள்ள அவர், அதனை அறிந்து கொள்வதற்காகவே தாம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடலுக்கான வேண்டுகோளை விடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் சமாதான ஆலோசனை சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை நடைபெறவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஜோசப் எம்.பி...

அரியநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வைத்திய கலாநிதி கே.சிவபாலன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

குறிப்பாக இப்பிரதிநிதிகள் மனித உரிமைகள் தொடர்புடைய பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### இரு நாட்களாக....

மத்தியில் பதற்றத்தை தணிக்கும் முகமாக கரிசல் பாடசாலையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இனியவன் உட்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்

இதில் தொடந்தும் பிரதேசத்தில் அமைதி காப்பதென இரு தரப்பும் இணக்கம் தெரிவித்த அதேநேரம், முஸ்லிம் இளைஞனின் கொலையில் சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடிக்கும் பொறுப்பை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பது எனவும் இணக்கம்காணப்பட்டது.

அதேநேரம் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் அவர் நேற்று தமிழ் முஸ்லிம் மக்களையும் சந்தித்து நிலைமைகளை சுமுகமாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

### கருணா...

மேற்கொண்ட இன்னொரு அதிரடித் தாக்குதல் நடவடிக்கையில் கருணாகுழுவைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் மூவர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் கருணா குழுவினர் சுமார் 10 பேர் தங்கியிருந்த மறைவிடம் ஒன்றின் மீது இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு கருணா குழு உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் மூவர் காயமடைந்தனர் ஏனையோர் அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

இந்தத் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்ட போதும் நித்தி, வித்தி ஆகிய இருவர் கொல்லப்பட்டதே உறுதி செய்யப்பட்டது.

கொல்லப்பட்ட இருவரது சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டு வாகரைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் இவற்றை எடுத்துச் செல்லுமாறு பெற்றோருக்கு புலிகள் அறிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் ஒரு ஏ.கே 47 துப்பாக்கி உள்ளிட்ட பல்வேறு பொருட்களையும் தாம் கைப்பற்றியிருப்பதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.